Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.


| மலர் கஉ | பிரமாதி ஆண்டு ஆவணித் திங்கள் 1939ஆம் ஆகஸ்டுமீ | இதழ் அ |
| --- | --- | --- |


## கோனாட்டுக் கொடிநகராம் கொடும்பாளூர்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

சைவ சமயப் பெரியார்களுடைய பிறந்த ஊர் நாடு முதலியவைகள் பற்றிய விவரங்களையும், வாழ்க்கை வரலாற்றுச் சான்றுகளையும் நாம் அறிந்து தெளிவதற்கு முயற்சி செய்வதில்லை. பிறநாட்டுப் பெரியார்களைப்பற்றிய முழு விவரங்களையும் மேல்நாட்டு மொழிகளிலிருந்து மொழி பெயர்த்துத் தமிழில் நமது இளைஞர்கள் படிக்கிறார்கள். ஆனால் நமது நாட்டுப் பெருமக்கள் வரலாறுகளைப் படிப்பதற்குரிய சாதனங்களை நாம் தருவதில்லை. இது பல நாட்களாகவுள்ள ஒரு பெருங்குறை. இக்குறையைக் கூடிய வரையில் நீக்கி அறுபத்துமூன்று நாயன்மார்கள் பிறப்புத்

தலங்கள், நாடுகள், வாழ்க்கை வரலாறுகள், படங்கள் முதலியவற்றை நல்லமுறையில் ஆராய்ச்சித் துறையிற் சேகரித்துச் சேமித்துச் செவ்வைப்படுத்தி வெளியிடுவது கோயன் புத்தூர் - திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் எழுதிவரும் பெரியபுராண உரைத் திருப்பணியாகும். இப் பேரறிஞருக்குப் பெருந்துணையாகத் தொண்டு புரிபவர் "கோவை கிழார்" என்ற புனைபெயருடைய ராவ்பகதூர் - திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்களேயாவர். இவ்விரு நண்பர்களையும் யான் சில வாரங்கட்கு முன் சந்திக்க நேர்ந்தது. அப்போது மேற்கூறிய விஷயத்தைப் பற்றிப் பேசும்போது, இடங்கழி நாயனார் வாழ்ந்த கோனாட்டுக் கொடும்பாளூர் யாங்குளது, அவ்விடத்துள்ள கோயில்கள் யாவை என்பனபோன்ற விவரங்களை அறிய விரும்பினார்கள். அன்றைய பிற்பகலே யான் நீலகிரியிலுள்ள குன்னூருக்கு (Coonoor) ரயிலில் பயணப்பட்டுச் செல்ல நேர்ந்தது. கூடிய விரைவில் முயன்று கிடைக்கக் கூடியனவற்றை அறிவிப்பதாகத் தெரிவித்தேன்.

இந்த சம்பாஷணை நிகழ்ந்த சில நாட்களுக்குள் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த கொடும்பாளூர் என்ற கிராமம் ஒன்றில் நிலம் உழும்போது கலப்பையில் கருங்கல் சிக்கி, அகழ்ந்து பார்க்க நேர்ந்தபோது ஒரு பழைய சிவாலயத்தின் பகுதிகள் வெளிப்பட்டன என்ற செய்தி தினசரிப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. இச்செய்தி திருவருளின் துணையென்றே எண்ணக் கிடந்தது. குன்னூரிலிருந்து சென்னைக்குத் திரும்பியவுடன் புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பற்றிய நூல்களைப் *பார்த்ததில் கீழ்கானும்

*Pudukottai State Manual & Gazetteer 1921, 1938 Editions and Inscriptions of the Pudukottai State 1929 Edition.

விவரங்கள் கிடைத்தன, பேருவகை யளித்தன. சைவப் பெருமக்கள் அனைவரும் இம்முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டுமென்றெண்ணியே இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது. இக்கட்டுரையிற் காணப்பெறாத வேறு விவரங்கள் உண்டாயின், அறிந்த நண்பர்கள் அவற்றையும் வெளிப்படுத்தி நம் மக்கள் பொது அறிவைப் பெருக்கிப் புண்ணியம் பெறுவார்களாக.

கொடும்பாளூர் என்பது புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஒரு பகுதியாகிய குளத்தூர் தாலுகாவிலுள்ள ஒரு கிராமம். புதுக்கோட்டையென்ற தலை நகரிலிருந்து வடமேற்கில் இருபத்தைந்து மைல் தொலைவிலுள்ளது. விராலி மலைக்குத்தெற்கே நான்கு மைல் தொலைவில் மதுரைக்குப்போகும் பெருவழிக்கு அரை மைல் கிழக்கிலுள்ளது. மோட்டார் மூலம் சுலபமாகப் போகலாம்.

இவ்வூர் மிகப் பழமையானது. கொடும்பாளூர் என்ற பெயரும் மிகப் பழமையானது. இடையில் இப்பெயர் இருக்குவேளூர், மங்கம்மாள் சமுத்திரம் என்று மாறிற்று. ஆனால் இப்போது பழைய பெயரே வழக்கத்திலிருக்கிறது. இவ்வூரிலுள்ள பெரியகுளத்துக்கருகில் பழைய கோட்டை, அகழ் முதலியவற்றின் இடிந்த பகுதிகள் சில காணப்படுகின்றன. சில புஞ்சைகட்கு விடுதிக்காரப்புஞ்சை, குதிரைக்காரப் புஞ்சை முதலிய பெயர்கள் இன்றும் வழங்கப்படுவதால் பழைய காலத்தில் விசாலமான விடுதிகளும் குதிரைப் படை முதலியனவும் இங்கிருந்தனவென்று ஊகிக்கலாம். சில நாட்களுக்கு முன் தினசரிப் பத்திரிகைகளில் ஒரு சிவாலயம் வெளியாயின செய்தி அறிவிக்கப்பட்டது போலவே அவ்வப்போது சிவலிங்கங்களும் பிறவும் வெளிப்படும் செய்திகள் கிடைத்துள்ளன. இவ்வூரில் நூற்றெட்டுச் சிவாலயங்கள் இருந்தனவென்று இவ்வூரார் கூறுகின்றனர்.

இப்போது மூவர்கோவில், முச்சுகுண்டேசுவரர் கோவில் என்ற இரண்டு கோவில்கள் காணப்படுகின்றன. இவற்றில் சிற்பத்திறமை வாய்ந்த வேலைகள் பல வுள்ளன. மூவர் கோயில் பூதிவிக்கிரமகேசரியும் அவன் மனைவியர் இருவரும் ஆகிய மூவரால் கட்டப்பட்டது. இக்கோயிலின் பிரகாரத்து மாடங்களில் நாலேகாலடி உயரமுள்ள அர்த்தநாரீசுவரர், முருகர் முதலிய அழகு வாய்ந்த கற்சிலைகள் உள்ளன. பத்தரையடி நீளமும், ஆறேமுக்காலடி உயரமும், மிகுந்த கம்பீரமும், அழகுமுள்ள ஒரு கருங்கல் நந்தி இங்குளது. இது, தஞ்சாவூர் இராஜராஜேசுரமாகிய பெரிய கோயிலில் உள்ள நந்தியின் அளவில் பாதியளவுள்ளது (தஞ்சை நந்தியின் உயரம் பன்னிரண்டடி பத்தங்குலமாகும்). இக் கோயிலிற் சில கல்வெட்டுக்களேயுள்ளன. மிகுதியான கல்வெட்டுக்கள் முச்சுகுண்டேசுவரர் ஆலயத்தில் உள்ளவை. இவற்றிலிருந்து இக்கோயிலே இவ்வூர்க்குப் பழமையான கோயில் என்பது துலங்குகின்றது. கல்வெட்டுக்களிலெல்லாம் "கோனாட்டுக் கொடும்பாளூர் உடையார் ஸ்ரீ திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு" என்றே பெரும்பாலும் காணப்படுகின்றது. முதுகுன்றேசுவரர் என்ற பெயரே இப்போது முச்சுகுண்டேசுவரர் என்று திரிந்து வழங்குகிறது. இவ்வூரிலுள்ள இடிந்த கோட்டைக்குக் காராளன் கோட்டையென்ற பெயர் வழங்குகிறது. இவ்வூரின் ஜனத்தொகை ஆயிரத்துக்கும் குறைவானது. பிறப்பிறப்புக் கணக்கிலிருந்து இவ்வூர் ஜனத்தொகை நாளுக்குநாள் குறைந்துவருவதாகத் தெரிகிறது. இவ்வூரில் பதினேழு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவை "புதுக்கோட்டை சமஸ்தானத்துக் கல்வெட்டுக்கள்" (Inscriptions of the Pudukottai State-Edition 1929) என்ற வெளியீட்டில் 14, 33, 82, 104, 144, 233, 299, 322, 379, 493, 536,

545, 718, 766, 897, 991, 1085 என்ற எண்களை யுடையன.

புதுக்கோட்டை நகரத்துக்குத் தெற்கே நான்கு மைல் தொலைவிலுள்ள வெள்ளாறு பழைய காலத்தில் சோழ நாட்டுக்கும் பாண்டி நாட்டுக்கும் எல்லையாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வாற்றுக்கு வடக்கிலுள்ள பகுதியே முதலில் காடு நீக்கித் திருத்தப்பட்டு நீர் நிலைகள் ஊர்கள் குடியேற்றம் முதலிய வசதிகள் செய்யப்பெற்று வளமான நாடாகி அரசர்கள் ஆளுகைக்குட்பட்டதாயிற்று. பிறகு இப்பகுதிக்கு கோன் + நாடு (அரசுடைய நாடு) கோனாடு என்ற பெயரும், வெள்ளாற்றின் தெற்கிலுள்ள பகுதிக்குக் கான் + நாடு (காடாகவேயிருந்த நாடு) கானாடு என்றபெயரும் பல நூற்றாண்டுகளாக வழங்கி வந்தன. இக்கோனாட்டின் விஸ்தீரணம் இருபத்து நான்கு காதவட்டகை யென்பதாக ஒரு கல்வெட்டிலிருந்து தெரிகிறது. அக்கல்வெட்டு நமது தமிழ் மக்களுள் அரசர்களையன்றி ஒரு நாட்டு மக்களனை வரும் ஒருங்கு கூடிக் கூட்டுறவு முறையில் (Co-operation) தமக்குள் வரி விதித்து ஒரு திருக்கோயில் திருப்பணியை நடத்தி முடித்த மிக உயரிய முறையைத் தெரிவிப்பதால் அக்கல் வெட்டின் முக்கிய பகுதியைக் கீழே குறிப்பது மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது. இது புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சார்ந்த குடுமியாமலை யென்ற ஊரிலுள்ள சிகாநாதசுவாமி கோவிலிலுள்ள கல்வெட்டு No. 285 of Pudukottai State Inscriptions). இக்கோயிலின் பழைய பெயர் திருநலக் குன்றம் என்பது.

"கோமாற பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு கரு வது மகர ஞாயிற்றுப் பூர்வ பக்ஷத்துத் திரயோதசியும் திங்கட் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் கோனாடான

கடலடையாதிலங்கை கொண்ட சோழவள நாட்டு நாடும் நகரமும் கிராமங்களும் வன்னியர்களும் படைப்பற்றுக் களும் உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலில் காங்கேயராயன் மண்டபத்திலே இவ்வனைவோமும் நிறை வர நிறைந்து குறைவறக்கூடி எங்களிலமைந்து உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலில் ஸ்ரீருத்திர ஸ்ரீமாஹேசுவரர் ஸ்ரீகாரியம் தேவகன்மி கோயில் கணக்கர் இவ்வனைவர்க்கும் பிடிபாட்டுச் சாதனம் பண்ணிக் கொடுத்த பரிசாவது உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலில் திருப்பணிக்கு இக்கோனூடு இருபத்து நாற்காத வட்டகையும் ஊர்வழி தோறும் காணியாளராயிருக்கும் பிராமணர் செட்டிகள் வேளாளர் இப்படி உள்ளபேருக்கு ஆண்டொன்றுக்குப் பேரொன்றுக்குப் பணம் அரையும் இள மையார்க்குப் பேரொன்றுக்குப் பணம்காலும் படைப்பற்று களுக்குப் பேரொன்றுக்குப் பணம் காலும் தண்டிகளுக் கும் மற்றும் குடிமக்களுக்கும் பேரொன்றுக்குப் பணம் அரைக்காலும் பறையர் பள்ளர் பேரொன்றுக்குப் பணம் அரைக்காலும் இப்படியால் வந்த பணம் ஊர்வழிதோறும் வந்து தானத்தாரும் வயிராகியும் வரும் ஆண்டுகள்தோறும் தண்டித்திருப்பணி செய்விப்பார்களாகவும். தண்டுமிடத்துக் கொடாத பேரிடத்தில் வெண்கலமெடுத்தும் மண்கலம் தகர்த்தும் கொள்ளக் கடவார்களாகவும். இதற்கு வேறேற்றஞ் சுருக்கஞ் சொன்னாருண்டாகில் நாட்டுத் துரோகி சிவத்துரோகி பட்டதும்பட்டு இத்தால் வந்த........ ....... டு உள்ளதுவும் இவனுக்கே பரமாவதாகவும். இப்படி எங்களிலிசைந்து உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயில் திருப்பணிக்கு இப்பிடி பாட்டுச் சாதனம் பண்ணி ...........திருமலையிலே கல்வெட்டிக் கொடுத்தோம்........... இவ்வனைவரோம்''.

இவ்வாறு பணந்திரட்டி அக்காலத்தில் திருப்பணி நடைபெற்றது. இக்காலத்திலோ திருமதில்களிலும் கோபுரங்களிலும் வேரூன்றி வளரும் மரங்களையும் சேர்த்துக் கும்பிட்டு வலம்வரும் 'பக்த கோடிகளையே' காண்கிறோம்.

பழைய காலத்தில் சோழநாடு பல வளநாடுகளாகிய பெரும் பகுதிகளையும், ஒவ்வொரு வளநாட்டிலும் நாடுகள் என்ற சிறு பகுதிகளையும், ஒவ்வொரு நாட்டிலும் கூற்றங்கள் என்ற உட்பகுதிகளையும், கூற்றங்களுள் ஊர்கள் என்பனவற்றையும் உடையதாயிருந்தது. இப்போது ஜில்லா, தாலூக்கா, பிர்க்கா, கிராமம் (District, Taluk, Firka, Village) என்பன போன்ற பகுப்புக்களாக இவை காணப்படுகின்றன. அக்காலத்தில் வளநாடுகள், நாடுகள், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களைப் போர் வெற்றி, சிறந்த அரசர்கள், அரிய நிகழ்ச்சிகள் முதலியவற்றின் ஞாபகார்த்தமாக மாற்றுவது வழக்கமாயிருந்தது. அதேபோல் கோனாட்டின் பெயரும் அப்போதைக்கப்போது மாற்றப்பட்ட செய்தியைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இராஜராஜ சோழனுடைய ௨௨-வது யாண்டுக் கல்வெட்டு ஒன்று (No.86 - P. S. I.) கேரளாந்தகவள நாடாயின கோனாடு என்கிறது. முதல் இராஜேந்திர சோழனுடைய பதின்மூன்றாவது (கி. பி. 1024) ஆண்டுவரை பல கல்வெட்டுக்களில் இவ்வாறு காணப்படுவது அவ்வாண்டில் இரட்டபாடி கொண்ட வளநாடு என்ற பெயர் மாற்றத்தையும் (No. 105 - P. S. I.) பிறகு பல கல்வெட்டுக்களில் இவ்வாறு காணப்படுவது மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1185ல்) கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட வளநாடு என்பதையும் (No. 161) பெற்றது. சேரநாட்டில் வெற்றி, இரட்டபாடி வெற்றி, இராம

பிரானைப்போலக் கடலில் அணைகட்டிக் கடலடையாது கப்பற் படைகொண்டே கிடைத்த இலங்கை வெற்றி ஆகியவற்றை நினைவுறுத்தும் வகையில் இவ்வாறு கோனாட்டின் பெயர் அப்போதைக்கப்போது மாற்றப்பட்டது போலும். இக் கோனாடு பரந்த நாடாக விளங்கினமையால் வடகோனாடு, தென்கோனாடு, கீழ்கோனாடு என்று இதன் பகுதிகள் கூறப்பட்ட செய்தியும் கல்வெட்டுக்களிற் கிடைக்கின்றது. கொடும்பாளூர் "வடகோனாட்டு உறத்தூர் கூற்றத்துக் கொடும்பாளூர்" என்று கூறப்படுகிறது. இவ்வாறே தென்கோனாட்டுக் காரையூர் முதலியன கூறப்படுகின்றன. கோனாட்டுக்குத் தெற்கிலுள்ள நாடு கானாடு எனப்பட்டது, திருமெய்யம் தாலுக்கா முனிசந்தையிலுள்ள ஒரு கல்வெட்டு (No. 61) அவ்வூரைக் "கானநாட்டு முனியந்தை" என்பதாலறியப்படும்.

கோனாடு ஆதியில் காடுகள் நிறைந்த இடமாக இருந்து பிறகு நாளடைவில் ஒரு குடியேறிய வளநாடான செய்தியை மேலே கூறினோம். அடர்ந்த காடுகள், சோலைகள், நீர் நிலைகள் முதலியனவற்றால் இந்நாடு குளிர்ச்சி பொருந்தியதாகி மக்களுக்கின்ப மளித்த செய்தியை உவமை நலம் பெறச் சேக்கிழார் சுவாமிகள்,

"இருநிலமாமகள் மார்பில் அழுந்துபட எழுதும் இலைத்தொழில் தொய்யில் அணியினவாம்...குயில் நாடு கோனாடு"

என்றும்

"செங்கமல மதுமலர்...தெண்திரைவாவி...மாதவிச் சூழல் குருகுறங்கும் கோனாட்டுக்கொடி நகரம் கொடும்பாளூர்"

என்றும் இடங்கழி நாயனார் புராணத்திற் கூறுகின்றனர். அருணகிரி நாத சுவாமிகளும் விராலிமலைத் திருப்புகழ் ஒன்றில் (991 - சமாஜப் பதிப்பு) "கூதாள நீப நாகமலர்

மிசை சாதாரிதேசி நாமக்கிரியை முதல் கோலால நாதகீத மதுகரம் அடர்சோலை கூராரல் தேருநாரை மருவியகானாறு பாயும் வரி வயல் பயில் கோனாடு சூழ்விராலி மலையுறைபெருமாளே" என்று மிகச்சுவைபடக் கூறுகிறார்.

பழைய காலத்தில் கோனாட்டில் புலவர் பெருமக்களும் கொடையாளர் பக்தர்களும் நிரம்பியிருந்தனர். புறநானூற்றில் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடிய ஆறு பாடல்கள் உள்ளன. எறிச்சலூர் என்பது புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள எறிச்சி என்ற கிராமமென மகாமகோபாத்தியாயர்-டாக்டர்-சுவாமிநாதையர் அவர்கள் குறித்துள்ளார்கள். "கோடாச் சிவபூசை பவுருஷ மாறாக்கொடை நாளு மருவிய கோனாட்டு விராலிமலையுறை பெருமாளே" என்று அருணகிரியார் (487 - சமாஜப் பதிப்பு) கூறுவதும் மறத்தற்பாலதன்று. இந்நாட்டிற் கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலிருந்தும் மேலே விரிவாகத் தரப்பட்டுள்ள திருப்பணிக்கு வரிவிதித்த சாதனத்திலிருந்தும் இந்நாட்டினர் சிவபக்தியும் கொடைத்திறனும் நன்கு விளங்கும்.

இந்நாட்டைப் பழைய காலத்தில் "இருக்குவேள்" என்ற பட்டமுடைய வேளிர் குலத்தரசர்கள் ஆண்டுவந்தனர். இவர்கள் சோழர்கட்கு நெருங்கிய உறவுடையவர்கள். இவர்கள் செய்திகளைப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. ராஜசிங்கன் உத்தம சீலனான மும்முடிச்சோழ இருக்குவேள் என்பவன் சிற்றையூர் ஸ்ரீ அக்நீசுவரருக்கு உத்தமசீலமங்கலம் என்று ஓர் ஊருக்குத் தன் பெயரிட்டு அதைத் தேவதானமாகக் கொடுத்த செய்தியை ஒருகல்வெட்டுத் (No. 26—P. S. I.) தெரிவிக்கிறது. இக்கல்வெட்டிலிருந்தே கொடும்பாளூர் தலைநகரம் என்பதும் கிடைக்கிறது. மஹிமாலைய இருக்குவேளாயின பிராந்தகன் வீரசோழன் என்பவன் புதுக்கோட்டை சமஸ்தானம் குளத்

தூர் தாலுக்காவிலுள்ள நீர்ப்பழனி வளர்மதீசுவ்ரருக்கு ஒரு சந்திர கிரஹண புண்ணிய காலத்தில் கோயில் மெழுக்குத் துடவல் திருவலகு திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பாள் திருநந்தனவனம் இறைத்துச் சேகண்டிகை கொட்டுவான் முதலியவர்க்குத் தேவதானமாகக் கொடுத்த செய்தியை மற்றொரு கல்வெட்டுக் (No. 30—P. S. I.) கூறுகிறது. வேறு சிலவற்றிலும் இருக்குவேளிர் கொடைகள் பொறிக்கப் பெற்றுள்ளன. ஆனால் நம் நாட்டுத் தவக்குறைவால் இருக்குவேள் இடங்கழி நாயனாரைப்பற்றிய செய்தி யாதொன்றும் கல்வெட்டுக்களிற் காணப்படவில்லை. இதிலிருந்து இக்கல்வெட்டுக்கள் காணப்படும் கோயில்கள் தோன்றுவதற்கு முந்தியே இடங்கழி நாயனார் திகழ்ந்தனர் என்று ஒருவாறு ஊகிக்கலாம்: இவர் வேளிர் குலத்தரசர் என்பதைச் 'சேக்கிழார் இவர் புராணத்து மூன்றாவது பாட்டிற் கூறுகிறார்.

கொடும்பாளூரைப்பற்றிய குறிப்புச் சிலப்பதிகாரம் காடுகாண்காதையில் உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர். மாமுது மறையோன் வந்திருந்தோனை "யாது நும்மூர் ஈங்கென்வர"வெனக் கோவலன் கேட்ப, மறையவன் உரைத்தலும், அதுகேட்ட கோவலன் "மாமறை முதல்வ! மதுரைச் செந்நெறி கூறுநீயென வழிகேட்ப, மறையவன் "முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து........பாலையென்பதோர் படிவங்கொள்ளும்........சென்று....கொடும்பை நெடுங்குளக்கோட்டகம் புக்காற்........கானமும் எயினர்கடமும் கடந்தால்....தென்னவன்சிறுமலை திகழ்ந்து தோன்றும் கடம்பலகிடந்த காடுடன் கழிந்து திருமால் குன்றத்துச் செல்குவிராயின்....மாண்புடை மரபின் மதுரைக்கேகுமின்" என்று வழிகூறினன். ஈண்டுக் கொடும்பை என்பதற்கு அரும்பத உரையாசிரியர் கொடும்பாளூர் என்றும்,

அடியார்க்கு நல்லார் "கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டூர்க்கும் பொதுவாகிய ஏரியினது கரையைக் கழிந்து" என்றும் கூறுவதை நோக்குக. இதிலிருந்து சிலப்பதிகார காலத்திலேயே உறையூரிலிருந்து மதுரைக்குப் போகும் வழியில் கொடும்பாளூர் பிரபலமாகத் திகழ்ந்ததென்பது விளங்கும். இக்காலத்திலும் அவ்வழி செம்மையாயுளது. கொடும்பை என்று இவ்வூரின் பெயர் சுருக்கமாக வழங்கி வந்த செய்திக்கும் கல்வெட்டுக்கள் ஆதரவளிக்கின்றன. இவ்வூரிலுள்ள முச்சுகுண்டேசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் (No. 144—P. S. I.) "கொடும்பை ஆலங்கோயில் திருமுதுகுன்றத்தைப் படி புதுக்கித் தேசநிகழ் தக்கணாமூர்த்தியும் திருமாலயனும் வாசலிருபாலரும்" ஒருவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விஷயம் கூறப்படுகிறது. இதே கோயிலில் மற்றொரு கல்வெட்டில் (No. 991—P. S. I.) "அதிகல சோழராயர் மூதுசொற்குடியான் பொய்ய மலைக்கு அநுமதி கொடும்பை சூழ்ந்த கோனாடு காவலும் குடையும் சேமக்கலம் புலித்தண்டையும் வாடாமாலையும் மேலைவாசல் காவலும் கூழங் குறுணியும்" கட்டளையிட்ட செய்தி கூறப்படுகிறது.

இதுகாறுங் கூறியவாற்றால் கோனாடென்பது இக்காலத்திய புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அமைந்துள்ள ஒரு நிலப்பரப்பென்றும், அக்காலத்தில் அது ௨௪ காத வட்டகை அளவுடையதாயிருந்ததென்றும், வடகோனாடு தென்கோனாடு கீழ்கோனாடு என்ற பகுதிகளையுடையதென்றும், கேரளாந்தக வளநாடு இரட்டபாடி கொண்ட வளநாடு கடலடையாதிலங்கை கொண்ட வளநாடு என்று மன்னர்களால் அவ்வப்போது புதுப்பெயர் சூட்டப்பட்டதென்றும், இயற்கைவளம் குடிவளம் புலவர் சிவபக்தர் கொடையாளர்

இருக்கை முதலிய சிறப்புக்களையுடையதென்றும், 'இருக்குவேளிர்குலத்தரசரால் ஆளப்பட்டதென்றும், பலசிவாலயங்களையுடைய கொடும்பாளூரைக் கொடிநகரமாகக் கொண்டதென்றும், இடங்கழி நாயனார் தொண்டாற்றிப் பேறெய்திய திருமிகு நாடென்றும் விளக்கமாகக் கண்டோம். இந்நாடு நகரங்களைப்பற்றிய வேறு பல செய்திகளை அடுத்த கட்டுரையிற் காண்க.

இக்கட்டுரை எழுதுங்கால் வேண்டிய நூல்களையும் பலவகையான விஷயங்களையும் உதவிய நண்பர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைமையாசிரியர் - ராவ்சாஹிப் - எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களேயாவர். அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகின்றது. இக்கட்டுரை எழுதி முடித்த சில நாட்களுக்குள் அடுத்துள்ள கட்டுரை திரு. இராமச்சந்திர செட்டியாரவர்களிடமிருந்து கிடைத்தது. இக்கட்டுரையில் விடுபட்ட பல பொருள்களுள்ளது அக்கட்டுரை. அஃதேபோல் அக்கட்டுரையிற் காணப் பெறாத பல இதன் கண்ணுள. எனவே இவ்விரண்டையும் ஒருங்கு சேர்த்து வாசித்தலே நலம் பயக்கும். திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் சில நாட்களுக்கு முன் பெழுதிய கடிதத்தில் அரிவாட்டாய நாயனார் ஊராகிய கணமங்கலம் என்பதற்குக் கிடைக்கக் கூடிய விவரங்கள் தேவையென்று விரும்பிக் கேட்கிறார்கள். ஆராய்ச்சியில் விருப்பமும் புலமையுமுள்ள நண்பர்கள் ஆருவியாய்ந்து தங்கள் முடிபுகளை நமக்கும் அவர்கட்கும் தெரிவிக்க வேண்டுகிறோம். மற்ற நாயன்மார்கள் பிறப்புத் தலங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நிகழ்தல் வேண்டும். திரு. முதலியாரவர்கள் கேட்கும் வரை காத்திருத்தல் வேண்டியதில்லை. ஒவ்வொரு நாயனாருடைய தலத்துக்கும் இவ்விருகட்டுரைகளைப் போன்ற விரிவானவை விரைவில் வெளி வருதல் வேண்டும். அன்பர்கள் பணி புரிக; திருவருள் துணை நிற்க.

# கோனாட்டுக் கொடும்பாளூர்

[C. M. இராமச்சந்திர செட்டியார்]

புதுக்கோட்டைச் சீமைக் கொடும்பாளூரில் சமீபத்தில் நிலத்தைத் தோண்டிப்பார்த்ததில் ஒரு பண்டைச் சிவாலயம் கண்டுபிடிக்கப்பட்டதென "ஹிந்து" பத்திரிகை 20-6-39-ல் வெளியிடப்பட்டது.

அவ்வூரில் ஒருவருக்குச் சேர்ந்த புன்செய் நிலத்தில் ஆலயச் சின்னங்கள் தோன்றவே, அரசியலார் உத்தரவின் பேரில் தோண்டிப் பார்க்கையில், அங்கே நான்கு அடி ஆழத்தில் 50 அடி நீளமும் 28 அடி அகலமும் கொண்ட அஸ்திபாரக்கட்டடம் ஒன்று இருந்ததென்றும் அதில் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலியவை காணப்பட்டன வென்றும் வெளியிடப்பட்டது. மற்றும் ஆலயத்தின் தளவரிசை அழகாக அமைக்கப்பட்டிருக்கிறதாம். சிவலிங்கமும் நந்தியும் இருந்ததினால் அது சிவாலயம் என்று ஊகிக்கின்றனர். ஆலயம் முழுதும் கல்லினால் கட்டப்பட்டிருத்தல்வேண்டும். சன்னிதி கிழக்கு நோக்கியது. நான்கு அடி உயரமுள்ள மூன்று விக்கிரகங்கள் கிடைத்தன. அவைகளில் இரண்டு ஆணுருவங்கள், மற்றொன்று பெண்ணுருவம். வேறு சில பிரதிமைகளும் கிடைத்தன. ஆனால் அவை சிதலமாய்ப் போயிருக்கின்றன. இவ்வுருவங்களைப் பார்த்தால் இப்போதிருக்கும் மூவர் கோயிலில் உள்ள உருவங்களைப்போல் இருக்கின்றனவாம். இவைகளின் காலம் 10-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று ஊகிக்கின்றனர்.

இவ்வறிக்கையைப் படித்த அன்பர்கள் கொடும்பாளூரைப்பற்றிய மற்ற சங்கதிகளும் அறிய விரும்புவார்கள்.

ஆகையினால் நாளது வரை தெரிந்த குறிப்புகளை இங்கே எழுதுவோம்.

## சிலப்பதிகாரம்

கொடும்பாளூர் மிகப் பழமையான ஓர் ஊர். இது முன் காலத்தில் சோழநாட்டு உறையூரிலிருந்து பாண்டிய நாட்டு மதுரைக்குச் செல்லும் பெரும் வழியில் இருந்த ஓர் ஊர். இவ்வூர் வழியே கோவலனும் கண்ணகியும் உறையூர் விட்டு மதுரைக்குச் செல்லுகையில் வழிகாட்டப் பட்டனர் எனச் சிலப்பதிகாரம் கூறும்.

“அறையும் பொறையும் ஆரிடை மயக்கமும்
நிறைநீர் வேலியும் உறைபடக் கிடந்தஇந்
நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்”
(68—71 காடுகாண்காதை)

என்ற அடிகளில் காணும் கொடும்பை, கொடும்பாளூர் ஆகும். இதற்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், “இந்தத் தொலையாத பெரிய சுரத்து நெறியைத் தொலைத்துப்போய்க் கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்க்கும் பொதுவாகிய ஏரியினது கரையைக் கழிந்து சென்றால்” என்கிறார். அரும்பதவுரை ஆசிரியர் “நிறைநீர் வேலி - நிறைந்த நீர்க்கு வேலியான ஏரிக்கரை, கொடும்பை - கொடும்பாளூர்; இவ்வூரிலே நெடுங்குளக்கரைக் குள்ளாகப் புக்கால்” என்கிறார். இவ்வூர் விட்டுப் புறப்பட்டால் மதுரைக்குத் திரிசூலம்போல மூன்று வழிபிரியும் என்று சிலப்பதிகாரம்கூறும். ஆகவே, அக்காலத்திலேயே இவ்வூர் சோழ நாட்டிலிருந்து பாண்டிநாடு செல்லும் பெருவழியிலிருந்தது என்றும் ஒரு பெரிய நீர் நிறைந்த ஏரியை அருகில் கொண்ட செழிப்பினையுடைய தென்றும் அறியலாம்.

பெரியபுராணம்

இனித் திருத்தொண்டர் புராணத்தில் இடங்கழிநாயனாருடைய ஊராக இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளதை நோக்கலாம். அதன்படி இவ்வூர் கோனாட்டுக் கொடும்பாளூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அங்கு காணும் விவரங்களை இனி எழுதுவோம். பெரிய புராணத்தில் கோனாட்டைக் குறிக்கும் பாடல் இது.

“எழுந்திரைமா கடலாடை இருநிலமா மகள்மார்பில்
அழுந்துபட எழுதும் இலைத் தொழில்தொய்யில் அணியினவாம்
செழுந்தளிரின் புடைமறைந்த பெடைகளிப்பத் தேமாவின்
கொழுந்துணர்கோ திக்கொண்டு குயில்நாடு கோனாடு.”

இவ்வருணனையினால் கோனாடு மிகவும் செழிப்புவாய்ந்தது என அறியலாம். தேமாவும் குயிலும் இருக்கையில் செழிப்புக்கு என்ன குறைவு? பூதேவியின் மார்பில் உள்ள தொய்யில் போன்ற அணியென இந்நாடு விளங்குவதாம்.

நாடு

கோனாடு என்ற பெயர் இக்கால வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் 7, 8 நூற்றாண்டுகளின் முன்னர் வழக்கில் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் ஆலயத்தில் முன் மண்டபத்துத் தென் சுவரில் சடாவர்மன் வீரபாண்டிய தேவனின் 17 ஆண்டுக் கல்வெட்டில் அவ்வாலயத்தைக் “கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துக் கொடும்பாளூர் திருமுதுகுன்றமுடைய நாயனார்” ஆலயம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டினால் கோனாட்டிற்கு “கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாடு” என்ற பெயர் இருந்ததாகவும்

அதன் பிரிவு உறத்தூர்க் கூற்றம் என்றும் அதில் கொடும்பாளூர் இருந்ததென்றும் அறிகிறோம்.

கோனாடு என்ற பெயர் வடஆற்காடு (107) தென்ஆற்காடு (171) செங்கல்பட்டு (1043) திருச்சி (705,64,70) புதுக்கோட்டை (19, 96, 141, 175 395) முதலான ஜில்லாக்களிலுள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.* அந்நாட்டிற்கு "கடலடையாது இலங்கைகொண்ட சோழவளநாடு" என்ற மற்றொருபெயர் திருச்சி (64,67,70) புதுக்கோட்டை (19,96,141,175) முதலிய கல்வெட்டுகளிலும் காண்கிறோம். இவை திருச்சிப்பூரத்துக் கோயில், புதுக்கோட்டைக் கொடும்பாளூர், குடுமியாமலை, நார்த்தாமலை இத்தலங்களிலுள்ள கல்வெட்டுகள் ஆகும். இப்பெயர் ஒரு சிறந்த காரணத்தைக் கொண்டுதான் இடப்பட்டிருக்க வேண்டும். பல சோழ மன்னர்கள் திரைகடல் ஓடி நிலம் கொண்டது அறிவோம். இராசராசன் 1, இராசேந்திரன் குலோத்துங்கன் முதலானோர் ஈழம் முதலிய தீவுகளைப்பிடித்து ஆண்டனர். இவர்களில் ஆதித்யச் சோழன் கடல் அடையாது இலங்கையைக் கொண்டான் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அது எவ்வாறு நடந்தது என்பது சரியாக விளங்கவில்லை, அது எவ்வாறாயினும் அப்பெயர் ஒரு விசித்திரப் பெயர் என்பதிலும் அது ஒரு சரிதச் செய்தியைக் குறிக்கிறதென்பதிலும் ஐயமில்லை.

மேலும் கோனாடு பலபிரிவுகளாக இருந்ததென அறிகிறோம். அவற்றில் ஒன்று வடகோனாடு என்பதாகும். இதனைத் தஞ்சை (64,67,103) புதுக்கோட்டை (23) என்ற கல்வெட்டுகளில் காணலாம். வடகோனாடு ஒன்றிருக்குமாகில் தென் கோனாடு ஒன்றிருத்தல் வேண்டும்

*மேலே குறித்த எண்கள் Topographical list of Inscriptions என்ற நூலில் உள்ளவை.

வடகோனாட்டில் தான் உறத்தூர்க் கூற்றம் என்ற பிரிவு உண்டு. அப்பெயர் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. அக்கூற்றத்தில் உள்ள ஊர்தான் கொடும்பாளூர்.

## நகரம்

கொடும்பாளூரைப் பற்றிய பெரிய புராணப் பாடல் அடியிற் கண்டபடி உள்ளது.

"முருகுறுசெங் கமலமது மலர்துதைந்த மொய்யளிகள்
பருகுறுதெண் திரைவாவிப் பயில்பெடையோ டிரையருந்தி
வருகுறுதண் டுளிவாடை மறையமா தவிச்சூழல்
குருகுறங்குங் கோனாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர்."

இதில் கோனாட்டுக் கொடிநகரம் என்று குறிக்கப்பட்டுள்ளதால் இவ்வூர் ஒரு அரசன் வாழ்ந்த தலைநகரமாக இருத்தல் வேண்டும். அவ்வாறே இருந்ததெனப் பெரிய புராணத்தாலும் கல் வெட்டுகளாலும் அறியலாம். கொடும்பாளூர் என்ற பெயர் வட ஆற்காடு (170) செங்கல் பட்டு (1043) தஞ்சை (426, 1403) திருச்சி (50, 66, 505) புதுக்கோட்டை (17 முதல் 29, 19,28, 46) முதலிய கல்வெட்டுகளில் காண்கிறோம். கொடும்பாளூரிலேயே இரண்டு கோயில்கள் உள்ளன. அவைகளில் மாத்திரம்12 கல்வெட்டுகளைப் பிரதி எடுத்திருக்கிறார்கள். இக்கல்வெட்டுகளிலிருந்து இவ்வூரைப்பற்றிய பல செய்திகளை நாம் அறியக்கூடும்.

இவ்வூரில் மூவர் கோயில் என்றும் முசுகுந் தேசுவரர் கோயில் என்றும் இரண்டு சிவாலயங்கள் இருக்கின்றன. மூவர் கோயில் சேர சோழ பாண்டியர்களால் கட்டப்பெற்ற மூன்று ஆலயங்கள் ஆகும் என்பது கர்ணபரம்பரைக் கதை. அது சரியான காரணம் அல்ல என்பது கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது. மூன்று ஆலயங்களில் இப்போது இரண்டையே காண்கிறோம். மூன்றாவது ஆலயம் அழிந்

திருக்கவேண்டும் என்று ஊகிக்கப்பட்டது. ஆனால் மேலே காட்டியபடி புதுக்கோட்டை அரசியலார் தோண்டி எடுத்துக் காட்டிய ஆலயம் மூன்றாவதாக இருக்கலாம். இம் மூன்று ஆலயங்களும் ஏற்பட்ட வரலாற்றைப் பின்னர் குறிப்போம்.

அரச பரம்பரை

இச்சிறந்த ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரச குலத்தைக் குறித்துப் பெரிய புராணம் இவ்வாறு கூறும்,

" அந்நகரத் தினிதிருக்கும் வேளிர் குலத்' தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டில் பாக்கொங்கின்
பன்னுதுலைப் பசும்பொன்னால் பயில் பிழம்பாம் பிளசையணிந்த
பொன்னெடுந்தோள் ஆதித்தன் புகழ்மரபில் குடிமுதலோர் "

இச்செய்யுளால் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வமிசம் வேளிர் குலத்தவர் என்றும் அவர்கள் ஆதித்தன் மரபில் உதித்தவர்கள் என்றும் அறிகிறோம். இவ்விரு செய்திகளும் கல்வெட்டுகளால் நிரூபிக்கப் படுகின்றன. திருச்சித் திருப்பராய்த்துறை (258 & 273 of 1903)இராசகேசரிவர்மன் கல் வெட்டுகளிலும் திருச்செந்துறை (306 of 1903) பரகேசரி வர்மன் கல்வெட்டிலும் தென்னவன் இளங்கோவேள் என்ற கொடும்பாளூர் மன்னன் பெயர் குறிக்கப் பட்டுள்ளது. மேலும் பரகேசரி வர்மன் கல்வெட்டு ஒன்றில் (337-04) செம்பியன் இருக்குவேள் என்ற மன்னன் பெயர் காண்கிறோம். குடுமியாமலைக் கல் வெட்டில் (335/1904) மதுராந்தகன் இருக்குவேள் என்ற கொடும்பாளூர் மன்னர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே கொடும்பாளூர் அரசர்கள் வேளிர் என்றும் அவர்கள் இளங்

கோவேள் அல்லது இருக்குவேள் என்ற பட்டத்தை வகித்து வந்தார்கள் என்றும் அறியலாம்.

மேலும் மேற்குறித்த மதுராந்தக இருக்குவேள் என்பவனுக்கு ஆதித்தன் விக்கிரம கேசரி என்ற பெயர் இருந்தது. இவனே மூவர் கோயிலை முதல் முதலில் கட்டினவனும். ஆகவே இவ்வரச குலத்தில் இத்தலைவன் சிறந்தவனாய் இருத்தல் வேண்டும். பெரியபுராணச் செய்யுளில் குறித்த ஆதித்தன் பொன்னம்பலத்தின் பொன் வேய்ந்தவன் என்றமையால் சோழர் குலத்தோன் என்று எண்ண முடியும். அச்சோழர் குலத்துச் சிற்றரசரே கொடும்பாளூர் மன்னர் கிளையெனக்கூற முடியும், என்றாலும் வேளிர் எனச் சொல்லி ஆதித்தன் குலத்தோர் என்றமையால் கொடும்பாளூர் மன்னர் கிளையில் உதித்த இவ்வாதித்தனும் பொன்னம்பலத்தில் பொன்வேய்ந்திருக்கலாகாதா என்ற கேள்வி பிறக்கலாம். அப்படியாயின் ஆதித்தன் விக்கிரம கேசரியின் பெயரே பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட மரபினனாக இருக்கலாம். ஆகவே, இச்செய்யுளில் கண்ட இரண்டு கூற்றுக்களுக்கும் கல்வெட்டு ஆதாரம் உண்டு.

இக்கல்வெட்டுகளில் கிடைத்த கொடும்பாளூர் மன்னர் வம்சத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுவோம். மூவர் கோயிலில் உள்ள ஒரு வடமொழிச் சாசனத்தில் (129/07) கொடும்பாளூர் மன்னர்களின் குடிவழி மரபு அடியிற்கண்டபடி குறிக்கப்பட்டுள்ளது.

பாண்டவர் யானைகளை அழித்த மன்னன் (கல்வெட்டில் பெயர் அழிந்து போயிற்று - இவன் மகன் பரவீரஜித் - இவன் மகன் வீரதுங்கன் (மழவரை வென்றவன்) - இவன் மகன் அதிவீரன் - இவன் மகன் அநுபமன் (சங்கக்ருதன்)- இவன் மகன் ந்ருபகேசரி - இவன் மகன் பரதுர்க்க மர்த்தனன் (வாதாபி வென்றவன்) இவன் மகன் சமராபிராமன்

(யதுவம்ச கேது; அதிராசமங்கலச் சண்டையில் சளுக்கியனைக் கொன்றவன்; அனுபமா என்ற சோழ அரச குமரியை மணந்தவன்) - இவன் மகன், (பூதிவிக்கிரமகேசரி காவிரிக் கரையில் பல்லவ சேனையை வென்றவன்; வஞ்சிவேளை அழித்தவன்; கொடும்பாளூரைத் தன் நகராகக் கொண்டவன், கற்றழி, வரகுணா என்ற இரண்டு அரசிகளை மணந்தவன்) - இவனுக்குக் கற்றழியிடமாகப் பிறந்த மக்கள் பராந்தக வர்மன் - ஆதித்ய வர்மன் என்ற இருவர்.

இக்குடி மரபை விவரித்த பிறகு அக்கல்வெட்டு பூதிவிக்கிரமகேசரியின் செயல்களைக் குறிக்கிறது. அதன்படி அவ்வரசன் மூன்று விமானங்களை (ஆலயங்கள்) கட்டி அவைகளில் ஒன்று தன் பெயரினாலும் இரண்டைத் தன் அரசிகள் பெயரினாலும் ஏற்படுத்தி மஹேசுவரப் பிரதிட்டை செய்து காளமுகச் சன்யாசிகளின் தலைவனான மல்லிகார்ச்சுனருக்கு ஒரு பெரிய மடம் கட்டி அங்கே 50 காளமுகர்களுக்கு அன்னம் படைப்பதற்காகப் பதினொரு கிராமங்களைத் தானம் செய்தான். மல்லிகார்ச்சுனர் மதுரையைச் சேர்ந்தவர். ஆத்திரேய கோத்திரத்தவர், வித்தியராசி தபோராசி என்ற இரு ஆசிரியர்களிடம் கலை பயின்றவர்.

மூவர்கோயிலைக் கட்டின பூதிவிக்கிரமகேசரியின் காலம் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. அவனுடைய பாட்டன் பரதுர்க்க மார்த்தனன், வாதாபி வென்றதாகக் கூறப்பட்டுள்ளான். வாதாபி வென்ற நரசிம்ம போத்தரையன் 7-வது நூற்றாண்டில் அதை வென்றான். குறுநில மன்னனான பரதுர்க்க மர்த்தனன் அப்பல்லவனோடு உதவியாகச் சென்றிருக்கவேண்டும். ஆகவே அவனும் 7-ம் நூற்றாண்டில் இருந்திருக்கலாம். அவன் பேரன் விக்கிரமகேசரி, பல்லவனையும் வீரபாண்டியனையும் வஞ்சி வேளையும் வென்றானும்.

அந்த வம்சத்தார்களில் சிற்றரசர்களை வென்றிருக்கக்கூடும். இவன் 8-ம் நூற்றாண்டின் முற்பாகத்தில் இருந்திருக்கலாம். ஆதித்தியசோழன் ஒரு வீரபாண்டியனை வென்ற சங்கதியை மேற்கொண்டு விக்கிரம கேசரியும் அவனையே வென்றிருக்க வேண்டும் என்று ஊகித்து சாசனப் பதிப்பாசிரியர் விக்கிரம கேசரி 10-ம் நூற்றாண்டினன் என்கிறார். (Ept. report 1908) சுந்தரமூர்த்திகள் (9-ம் நூ) கொடும்பாளூர் மன்னரான இடங்கழி மன்னரைப் பாடியிருத்தலால் சாசனப் பதிப்பாசிரியர் கூற்று ஐயத்திற்கு இடமாகும்.

காளமுக சன்னியாசிகள் தென்னாட்டில் விசேஷமாக இருந்ததில்லை; ஆனால் கன்னட நாட்டில் இருந்திருக்கின்றனர். மைசூர் சீமையில் பெளகாமியில் தக்ஷிண கேதாரேசுவரர் ஆலயத்தில் அவ்வகுப்பார் வழிபாடு செய்துவந்ததாக வீரவல்லாளன் II காலத்துக் கல்வெட்டு கூறுகிறது. அவர்கள் பிற்காலத்தவர்கள். ஒரு வேளை அக்காளமுக மதம் கொடும்பாளூர்வரை முற்காலத்தில் பரவி இருக்கலாம்: ஏனெனில் இவ்வூரிலும் சில கன்னட எழுத்துக்கள் இருக்கின்றன.

மேலே சொன்ன குடிமரபில் கண்ட பெயர்கள் எல்லாம் வடமொழிப் பெயர்களே. இவைகளுக்குச் சரியான தென்மொழிப்பெயர்கள் இருந்திருக்கலாம். சில தமிழ்க் கல்வெட்டுகளில் தமிழ்ப் பெயர்களே காணப்படுகின்றன. திருப்பராய்த்துறை திருச் செந்துறைச் சாசனங்களில் தென்னவன் இளங்கோவேள் என்ற மறவன் பூதியார், அவன் மனைவி கற்றழிப் பிராட்டி, இவர்களின் பெயர்களைக் காண்கிறோம். வடமொழிச் சாசனத்தில் பூதி விக்கிரமன் அவன் மனைவி கற்றழி என்றிருத்தலால் இவ்விரு தம்பதியர் பெயர்களும் ஒன்றே எனலாம். மற்றொரு சாசனத்தில் (337 of 04) செம்பியன் இருக்குவேள் என்ற பெயரும்

அவன் மனைவி வரகுணா என்ற பெயரும் காண்கிறோம். குடுமி யாமலை (335 of 04)ச் சாசனங்களில் மதுராந்தக இருக்கு வேள் என்ற ஆதித்த விக்ரம கேசரி என அவன் பெயரைக் காண்கிறோம். ஆகவே, இவனுக்குப் பெயர்களும் பிருதுக் களும்பல இருந்திருக்கின்றன.

கொடும்பாளூரில் திருப்பூதீச்சரம் என்ற ஆலயம் இருந்ததாகத் திருச்செந்துறைச் சாசனமும் கொடும்பாளூர் 138/1907 சாசனமும் கூறுகின்றன. இதைத்தான் பூதி விக்கிரமன் கட்டித் தன் பெயரால் தாபித்திருக்க வேண்டும். ஆகவே மூவர் கோயிலின் பழைய பெயர் பூதீச்சரமாக இருந்திருக்க வேண்டும். அதற்கு விக்கிரமகேசுவரம் என்றும் பெயர் இருந்தது. (140/07) தன் மனைவியர் பெயரால் ஏற்பட்டவைகளுக்குக் கற்றளீச்சரம், வரகுணீச்சரம் என்றிருக்கவேண்டும். இவைகளில் ஒன்றுதான் தற்போது தோண்டிக் கண்டு பிடிக்கப்பட்டதாக இருத்தல் கூடும். செம்பியன் இருக்குவேள் அல்லது பூதிபராந்தகன், திருச்சி ஜில்லா ஆண்டநல்லூர் ஆலயத்தைக் கட்டினான் என்று 358/1903 கூறுகிறது. இவன் பூதிவிக்கிரமனுடைய மூத்த மகனாக இருத்தல் வேண்டும். தென்னவன் இளங்கோவேளின் மகள் பூதி ஆதித்த பிராட்டி, சோழன் அரிகுலகேசரியை மணந்து திருச்செந்துறை ஆலயத்தைக் கட்டினாள். இச்செய்திகளால் கொடும்பாளூர் மன்னர்களும் அரசிகளும் சிவாலயத்திருப்பணிகளை மேற் கொண்டார்கள் என அறிகிறோம். விக்கிரமனுக்கு மறவன் பூதி என்ற பெயர் இருத்தலால் இவ்வம்சம் மறவர் குலத்தைச் சேர்ந்திருக்கலாம் என்று சாசனபரிசோதகர் ஊகிக்கிறார். மேலும் இவ்வமிசம் சோழர்களுடன் மணமுறை பெறக்கூடிய சிறப்புடன் விளங்கியிருந்தது.

## இடங்கழி நாயனார்

இவ்வாறு சைவத் திருப்பணிகளில் ஈடுபட்டு வந்த குடிமரபில் இடங்கழி நாயனார் அவதரித்தார். அதைக் கூறும் பெரியபுராணப் பாடல் இது,

“ இடங்கழியார் எனவுலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார் அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலு முன்னாதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினால் தொண்டர்வேண் டியசெய்வார் ”

கோனாட்டுக் கொடும்பாளூரில் வேளிர் குலத்தில் ஆதித்தன் குடியில் தோன்றிய இவர் தன் ஆட்சியில் சைவம் ஓங்கச் செய்து திருக்கோயில்களில் பூசை ஒழுங்கு பெற நடத்தி வந்தார். ஒருநாள் ஒரு சிவனடியார் பொருள் முடையால் நியதிக்கு முட்டு ஏற்பட, இடங்கழியார் அரண்மனையில் புகுந்து நெல்லை எடுக்க ஏவலாளர் பிடித்து மன்னரிடம் கொண்டு வந்தார்கள். மன்னர் விசாரித்து இச் செயல் சைவத் திருப்பணிக்காகச் செய்ததெனத் தெரிந்ததும் தன் நெற்குவியல்களை அடியார்களுக்குத் திறந்து வைத்து அக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். இவ்வாறு பன்னெடு நாள் ஆட்சி புரிந்து இடங்கழியார் சிவனடி அடைந்தார் என்பது இவர் சரிதச் சுருக்கம்.

சுந்தர மூர்த்திகள் இடங்கழி நாயனாரை “மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் ” என்றதால் அவருடைய காலத்திற்கும் (9. நூ. முற்பாகம்) இடங்கழியார் முந்தியவர் பூதி விக்கிரம கேசரி சைவத் திருப்பணியிலேயே ஈடுபட்டவரா கையாலும் 8-வது நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்திருக்கலாம் என்று முன்னமே கூறியிருக்கிறபடியாலும் ஒரு வேளை அவரே இடங்கழி என்ற திருநாமம் பெற்றிருந்தாரோ எனக்கேள்வி பிறக்கலாம். அவருக்கு ஆதித்தன்

என்ற பெயர் இருத்தலால் அவர் அவ்வம்சத்தில் வேறு ஒரு மன்னனாகவும் இருக்கலாம்.

இனித் திருத்தொண்டர் திருவந்தாதியில் இடங்கழி நாயனாரைப்பற்றி,

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன்
திங்கட் சடையார் தமரென் செல்வம் எனப்பறைபோச்
செங்கட் கிறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே !"

என்று கூறப்பட்டுள்ளது. முன்னே காட்டியபடி, "இருக்குவேள்" என்பது ஒரு பட்டம். ஆகவே 'இருக்குவேளூர்மன்' என்றது 'இருக்குவேளிர்மன்' என்றிருந்தால் பொருத்தமாக இருக்கும். கொடும்பாளூர் இருக்குவேள் வசித்த இடம் ஆனதினால் இருக்குவேளூர் என்ற பெயரும் பெற்றிருக்கலாம். இனி இருக்குவேளூர் கணம்புல்லர் உதித்த இடம் என்று அவரது புராணம் கூறும். அது வடவெள்ளாற்றின் தென் கரையில் உள்ளது. ஆகவே அவ்வூர் வேறு ஒரு ஊராகும். இனித் திருத்தொண்டர் புராண சாரத்தில் "கோநாட்டுக் கொடும்பாளூர் இருக்கும் வேளிர் குலத்தலைவர் இடங்கழியார்" எனக்காண்கிறோம். 'இருக்கும் வேளிர்' என்றது 'இருக்கு வேளிர்' என்றிருக்க வேண்டும் அல்லவா?

# தேவார உரை

[திரு - மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

## திருமருகல் - குறுந்தொகை.

சினத்தி னால்வரு செய்தொழி லாமவை
யனைத்து நீங்கநின் றாதர வாய்மிக
மனத்தி னான்மரு கற்பெரு மான்றிறம்
நினைப்பி னார்க்கில்லை நீணில வாழ்க்கையே.

பதவுரை:—சினத்தினால் - (உலக வாழ்வில்) வெகுளியினாலும், (அதற்கு ஏதுக்களாயுள்ள மயக்கம் (அவிச்சை) காமங்களினாலும்,

வருசெய் தொழில் ஆம்அவை - உண்டாகின்ற செய்தொழில்களாகிய ஐம்புல நுகர்வுகள்,

அனைத்தும் நீங்க - முழுதும் (மனதைவிட்டு) நீங்க,

மிக ஆதரவாய் நின்று - மிகவும் தனி அன்புடையவர்களாய் நிலைத்து நின்று,

மனதினாற் - தங்கள் தூய மனதில்,

மருகற் பெருமான் திறம் - திருமருகலில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய (அருட்செயலின்) ஆற்றலை,

நினைப்பினார்க்கு - நினைந்து தொழும் அடியார்களுக்கு,

நீள் நிலவாழ்க்கை இல்லை - நீண்டும் (அகன்றும்) பரந்திருக்கிற நில உலக வாழ்க்கை வாழ்தல் இல்லை.

விளக்க உரை:—சினத்தினால்வரு-மயக்கம் (அவிச்சை) அகங்காரம், அவா, ஆசை, வெகுளி என்னும் பஞ்சக் கிலேசங்களும், கலை, வித்தை, அராகம், காலம், நியமம் என்னும்

பஞ்சகஞ்சுக உடலோடு கூடிநின்று பொதுவகையில் போத்திருத்துவ மெய்தி நிற்கிற உயிர் பிரகிருதி மாயையில் சிறப்பு வகையாற் போத்திருத்துவம் எய்துதற்குக் கருவிகளாயுள்ளன. (போத்திருத்துவம் = உலக போக நுகர்தற்குத் தகுதியுடையதாந் தன்மை.) இந்த அஞ்சு பஞ்சக்கிலேசங்களும் திருவள்ளுவ நாயனர் கூறுகிறபடி மயக்கம், காமம், வெகுளி என்னும் மூன்றிலடங்கும். இம்மூன்றனுள் ஆணவ மலத்தின் காரியமாகிய மயக்கம் பற்றிக் காமமும் (ஆசையும்) காமம் பற்றி வெகுளியும் (சினமும்) உண்டாகின்றன. சினமானது வினைய மயக்கம் காமங்களிலும் உள்ளன. அதனால் திருஞானசம்பந்த அடிகள் திருச்சிவபுரம் தேவாரப் பதிகம் 5-வது பாட்டில் "சினமலியறுபகை" என்றார். ஆதலின் சினமாகிய வெகுளியுடன் அதன் இனங்களாகிய மயக்கமும், காமமும் உடன் சேர்த்துப் பதவுரையில் கூறப்பட்டன.

வருசெய் தொழில் ஆம்அவை :—வருதல் = இயல்பாக உண்டாதல். செய்தொழில் = ஒருசொல் நீர்மைத் தாய் வந்தது. வேட்கை அறிவு செயல்களாலுண்டாகும் நிகழ்ச்சிகளைச் செய்தொழில் என்றார். 'அவை' என்ற சுட்டுப்பெயர் அடி சுட்டுப் பெயராய் ஐம்புலநுகர்வுகளை (விடய நுகர்வுகளை)க் குறிக்கின்றன, நாற்றம், சுவை, ஒளி ஊறு, ஓசை, என்னும் ஐம்புல நுகர்வுகளும் பஞ்சக்கிலேசங்களாகிய, மயக்கம், காமம், வெகுளி என்பனவற்றால் விளைதலால் சினத்தினல் வரு செய்தொழிலாமவை என்றார்.

அனைத்தும் நீங்க :—ஐம்புல நுகர்வுகளில் சிறிது, மனதில் வாசனையிருப்பினும் உலக வாழ்வுப்பற்று விட்டு மேலான சிவபேரின்ப வாழ்வு உண்டாகாது என்பார், அனைத்தும் நீங்க என்றார்.

மிக ஆதரவாய் நின்று - ஆதரவு என்பது உலகப் பொருளிலும் உயிர்ப்பொருளிலும் முற்றிலும் பற்றுவிட்ட தனி அன்பு. அந்த அன்பும் வழுவாது நிலைத்து நிற்றலைக் குறித்தற்கு 'நின்று' என்றார்.

மனத்தினால் - மேலே கூறியவாற்றால் இந்த மனமானது மல இருள் முழுவதும் நீங்கப்பெற்று சிவகரணமாய் மாறிய தூயமனம் என்பது பெறப்படும். மனத்தினால் - உருபு மயக்கம்; மனத்தின்கண்,

மருகற்பெருமான் திறம் - திறம் = ஆற்றல் அதாவது இறைவனுடைய அருட்செயலின் ஆற்றல் "இருந்தார் சிவன் செயலியாவையும் நோக்கி" என்று திருமூலர் திருமந்திரம் 127-வது பாட்டில் சிவசித்தரைப் பற்றிக் கூறியிருத்தல் காண்க.

நீள்நில வாழ்க்கை இல்லை - இத்தகைய அடியார்கள் ஏனைய மக்கள்போல உலகில் வாழ்கிறவர்களாகக் காணப்படினும் உலக வாழ்வு பற்றற்றுச் சிவபெருமானையே எப்பொழுதும் மனத்தில் நினைந்துகொண்டிருக்கிற சீவன்முத்தர் என்று கூறுவார், நீள்நில வாழ்க்கை இல்லை என்றார். திருமந்திரம் 1166வது பாட்டில் 'கண்ணுடையானைக் கலந்தங்கிருந்தவர் மண்ணுடையாரை மனிதரிற் கூட்டொணா' என்று திருமூலர் இவர்களைப் பற்றிக் கூறினார். இந்தத் தேவாரப் பாட்டில் அடிகள் மாந்தர் இம்மை வாழ்விலிருக்கும் பொழுதே வீட்டின்பப்பேறு அடைந்து சீவன் முத்தர்களாய் வாழலாம் என்ற சைவசித்தாந்த உண்மையைக் கூறுகின்றார்; சிவஞான போதம் 12வது சூத்திரம் இச்சீவன் முத்தர்களுடைய தன்மையைக் கூறுகிறது.

# தாயுமானார்

[கச்சி. முனிசாமி உடையார், B. A.]

## II

தாயுமான சுவாமிகளின் சரித்திரத்தில் நாம் அறிய வேண்டிய உண்மை என்ன என்பது விசாரிக்க வேண்டியது அவசியம். கடவுள் உடலையும் உலகத்தையும் கொடுத்தது உயிர் கடைத்தேறுவதற்காகும். உலகத்தில் நாம் எவ்வளவு பெரிய பதவியிலிருந்த போதிலும் அஃது உடலுக்கு நலமே ஒழிய உயிருக்கு நலந்தருவதல்ல. உயிரைப்பற்றி நமக்கு இவ்வுடல் கிடைத்ததாகையால் இவ்வுடல் நல்ல நிலையிலிருக்கும்போதே உயிரைப்பற்றி விசாரிக்க வேண்டியது நமது கடமை. ஆகையால் உலக விவகாரங்களிலிருந்து விலகிக் கொண்டபோது பார்த்துக் கொள்ளுவோம் என்று தள்ளி வைக்காமல் சிறுபோதிலேயே நாம் உயிரைப்பற்றி விசாரிக்க வேண்டும்; ஞான நூல்களை கற்கவேண்டும்; அதன் பயனாகத் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடையவேண்டும். இவ்வுண்மைகளையே சுவாமிகளின் சரித்திரத்தில் காண்கிறோம். எனவே பலர் சென்று தேய்ந்த வழியில் செல்வதே நலமென்ற உண்மைபோல் சுவாமிகளைப்போன்ற பல பெரியோர்கள் சென்ற வழியே நாம் போகவேண்டுமென்பதை நாம் அறிந்து அவ்வழியில் சென்று கடைத்தேறுவோமாக.

தாயுமானாரைப்பற்றி விசாரிக்க வேண்டிய காரணங்களையும் அவர் சரித்திரத்தில் நாம் அரியவேண்டிய உண்மைகளையும் ஆராய்ந்தோம். இனி அவர் இயற்றியுள்ள பாடல்களில் அறிய வேண்டியவற்றை நாம் ஆராய்வோம். நாம்

பிறந்திருக்கின்ற இவ்வுலகம் கர்மங்கள் செய்வதற்கும் அவற்றின் பலன்களை அனுபவிப்பதற்கும் ஞானத்தையும் பெற்று வீடு பெறுவதற்கும் யோக்கியமானதாதலால் இதற்குக் கர்மபூமி என்ற பெயர் வழங்கப்படுகிறது. சுவர்க்கத்தில் போகம் அனுபவிக்கின்றவர்களும் நரகத்தில் துன்பம் அனுபவிக்கின்றவர்களும் இக்கர்ம பூமியில் வந்து பிறந்தாலொழிய வீடுபேறடைய வழியில்லை. இக்கர்ம பூமியில் உள்ள பிறவிகளில் தலை சிறந்தது மனிதப் பிறவியாகும்.

> "எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
> யாதினும் அரிது அரிது காண்"

இம்மனிதப்பிறவியில் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஈசன் அருள் இல்லாத காலம். மற்றொன்று அவனுடைய அருள் தோன்றிய காலம். இதைத் தாயுமானுர்,

> "ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினு
> லாகின்ற வாக்கை நீர்மேல்
> அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநா
> னறியாத கால மெல்லாம்
> புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
> போந்தநெறி யென்றி ருந்தேன்
> பூராய மாகநின தருள்வந் துணர்த்தவிவை
> போனவழி தெரிய வில்லை
> எந்தநிலை பேசினு மிணங்கவிலை யல்லா
> லிறப்பொடு பிறப்பை யுள்ளே
> எண்ணினு னெஞ்சது பகீரெனுந் துயிலுரு
> திருவிழியு மிரவு பகலாய்ச்
> செந்தழலின் மெழுகான தங்கமிவை யென்கொலோ
> சித்தாந்த முத்தி முதலே
> சிரகிரி விளங்கவரு தக்ஷிணுமூர்த்தியே
> சின்மயா னந்த குருவே"

என்ற பாட்டில் விரிவாகக் கூறுகின்ருர். இப்பாடல் நமது

ஆரம்ப நிலையைத்தெரிவிக்கிறது. ஈசனுடைய அருள் இல்லாத காலத்தில், அதாவது அறியாமையினால் மூடப்பட்டிருந்த காலத்தில் மக்கள் உண்பதும் உடுப்பதுமே இன்பநிலை என்றிருந்து, ஈசனுடைய அருள் சற்று தோன்றிய காலத்தில் உலக இன்பங்களெல்லாம் நிலையற்றனவென்றெண்ணி நிலைத்த இன்பத்தைத்தேட முயன்று அநேக நிலைகளை ஆய்ந்து ஒரு நிலையிலும் மனந்திடப்படாமையால் இறப்பையும் அதற்குப் பின் இருக்கும் பிறப்பையும் அதனால்வரும் பல துன்பங்களையும் உன்ன நெஞ்சம் துடித்து இரவு பகல் தூக்கமின்றி உடல் மெலிந்து இருக்கும் நிலையைப் இப்பாடல் தெரிவிக்கின்றது.

இம்மனித உடலைப் பெற்று நாம் அடைய வேண்டிய பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு, என்பன. இவற்றை அடைதலினால் வரும்பயன் ஞானம்.

"புருஷர்பெறு தர்மாதி வேதமுடனாகமம் புகலுமதி னாலாம்பயன்
ஞானநெறி முக்ய நெறி"

என்றார். இப் பிறவியெடுத்து அறிய வேண்டிய அப் பொருள்களை அறியாவிடில் அவன் பேதையாகின்றான். இதைத் தாயுமானார்,

"புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேது மில்லேன்"

ஆதலால்,

"ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள்ளதோ"

என்றார்.

உலக நடையைச் சிந்தித்தபோது உலகம் பொய் நெறியைப் பற்றி ஒழுகுகின்றது. பொய்யுடல் காரணமாக உண்பதற்கு அலைந்து உண்டபின் தூங்கி இதுவே செய்தவமென்

றெண்ணியிருக்கின்றதென்று சுவாமிகள் வருந்துகின்றார். இதை,

"பொய்திகழு முலகநடை யென்சொல்கே னென்சொல்கேன்
பொழுதுபோக் கேதென்னிலோ
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவம லாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ வதையறி கிலேன்"

என்ற பாடலில் அறிவிக்கின்றார்.

தான் குணமொன்று மில்லாதவனென்றும் தீயகுணங்கள் பல உடையவனென்றும் பயனற்ற கூட்டங்கள் பலவற்றில் சேர்ந்துள்ளவனென்றும்,

"குணமொன்று மொன்றி லேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடிய பாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்த வருளிற்
செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
செல்வமெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மித்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலாய்
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானே னிவைக்கு மாளாகவோ"

என்ற பாட்டில் சொல்லுகின்றார். உலக நடையைப் "பொய்யான உலகத்தை", "பொய்யாருலக நிலை", "பொய் திகழு முலகநடை" என்று பல முறை கூறுகின்றார்.

ஆகவே தாயுமானுர் முதலில் தன்னைப் பார்த்தார் ; பின், பிறரைப் பார்த்தார் ; அதன் பின் உலகத்தைப் பார்த்தார். ஈசன் அருள் இல்லாத காலத்தில் தன் நிலையையும், அஃது தோன்றிய காலத்துத் தன் நிலையையும், புருஷர் வடிவெடுத்து புருஷார்த்தமில்லாததினுல் தன்னைப் போன்ற பேதை பிறர் இல்லை என்பதையும், உலகமோ பொய்யான நடையுடையது, உண்டு உடுத்து உறங்குவதே இன்ப நிலை என்று இருக்கிறது என்பதையும் மறிந்தார்.

தாயுமானுர் தெய்வத்தைப் பற்றி என்ன கொள்கையுடையவர் என்பதை நோக்குவாம்.

“ஊனனந் தம்பெற்ற போனனந் தஞ்சுற்று
முறவனந் தம்வினையினுல்
உடலனந் தம்செயும் வினையனந் தம்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தம்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்த பேதம்”

“ஒருவனுகிய சிவபிரான்”

“மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞான குருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே”

“சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகும்
திவ்விய தேஜோ மயத்தை”

“பாசா டவிக்குளே செல்லாத வர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே”

“கருதரிய ஆனந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரிய வடிவை”

“ஆறுசம யங்கள்தொறும் வெறுவே றுகிவிளை யாடுமுனை”

"சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத் தன்மை நாமம் ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ் சோதியை" [செய்யும்

"அகரவுயி ரெழுத்தனைத்து மாகிவேறு
யமர்ந்ததென அகிலாண்ட மனைத்து மாகி."

இம்மொழிகளால் கடவுள் ஒருவனே, அவன் சிவன், அவன் மக்கள் அடைந்துள்ள பக்குவ நிலைக்கேற்றபடி பல பேதப்பட்ட உருவங்கள் கொண்டிருக்கின்றான்; அவ்வுருவங் கள் கருணையினால் தானே மேற்கொண்டவையே ஒழிய பிற ரால் கொடுக்கப்பட்டவையல்ல; அவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அறியாதபடி தங்கியிருக்கின்றான்; அவனை அறிய அவன் அருள்வேண்டும்; உலக போகத்தில் பற்றில் லாதவர்க்குத்தான் அவன் அருள் கிடைக்கும்; அஃது கிடைத்து விட்டால் அவன் மக்களுடைய துன்பத்தைத் துடைத்து இன்பமாகிய மழையைப் பொழிகின்றான்; அவன், தான் தொழிற்படாமல் தன் முன்னில் படைத் தலாதி முத்தொழில்கள் நிகழச் செய்கின்ற துரியவடி வினன்; அவன் ஆறு சமயங்களிலும் வேறு வேறாக நின்று அன்பர்களை ஆட்கொள்ளும் விளையாட்டையுடைய வன்; அவன் சாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், முத்தி, அருவுருவத்தன்மை, நாமம் முதலிய ஏதுமில்லாதவன்; அகர உயிர்போல் தான் யாராலும் இயக்கப்படாமல் எல்லா உயிர்களிலும் மறைந்திருந்து எல்லா உயிர்களையும் இயக்கு கின்றவன் என்னுமுண்மைகளைத் தாயுமானர் அறிவிக் கின்றார்.

தாயுமானர் உயிர்களைப் பற்றியும் பாசத்தைப் பற்றி யும் பின் வருமாறு பேசியிருக்கின்றார். உயிர்கள் கடவுளால் படைக்கப்படவில்லை. உயிர்கள் இறைவனைப் போல் அநாதி

யானவை; அவனுக்கு அடிமைப்பட்டவை என்பதை "என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ" என்ற மொழியால் அறிகின்றோம். ஆனால் உயிர்கள் மல சம்பந்தத்தால் சிற்றறிவுடையனவாயிருக்கின்றன. தன்னையும் பிறரையும் காட்டாத ஆணவ மலமாகிய இருட்டறையில் கண்ணில்லாத குழவியைப்போல் கட்டுண்டிருந்தன. நாகத்தின் விடத்தைப் போல் அவ் ஆணவமலம் கௌவினதால் அவை மயங்கிக் கிடந்தன. கடவுள் கருணையினால் உயிர்களுக்கு உடலைக் கொடுத்து உலகத்தில் போகவிட்டு, உயிர்கள் நல்ல வழியில் நடக்க வேதங்களைக் கொடுத்து, மறைமொழிக்குத் தப்பி நடக்கும் உயிர்களைத் தண்டித்துக் கடைசியில் துன்பத்தை நீக்கி நினைப்பு மறப்பில்லாத பேரின்ப வீட்டில் இசைந்து துயில் கொள்ள துணை செய்கிறார் என்ற உண்மைகளைச் சுவாமிகள் கீழ்வரும் மொழிகளால் விளக்குகின்றார்.

"காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவினை யாட்ட மைத்திட்டு
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில்கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே"

"கௌவுமல மாகின்ற நாகபாசத்திலே"

"உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துளரிடும வத்தையாகி
யுருவுதான் காட்டாத ஆணவமும்."

ஆணவத்திற்கு எழுவேகங்கள் உண்டு. அவைகளில் ஒன்று குருவால் உபதேசிக்கப்பட்டும், தக்க நூல்களை வாசித்தும், கேட்டபடியும் கற்றபடியும் நடத்தாமல் செய்வது ஒரு வேகம். உயிர்கள் அறுதியானவை யானபோதிலும், ஜாதி குலம்பிறப்புஇறப்பு இல்லாதவை எனினும் பொன்போன்ற கடவுளுக்கு இணையாகா; அவனுக்கு அடிமைப்பட்டவையே; பொன்னுக்குக் களிம்புதோய் செம்பு இணையில்லாததுபோல், கடவுள் அச்செம்பாகிய உயிரை ஞானமாகிய அனலில் காய்ச்சிக் களிம்பைப் போக்கடித்துத் தன்னுடைய அருளான குலிசத்தினுல் பரிசித்து வேதிசெய்து தன்னைப்போல் தங்கமாக்கிக் கொள்ளுகிறுன் என்ற உண்மையை,

"கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்ப னையயான்
காண்டக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளு ருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என்சொல் லுவேன்"

என்ற பாட்டில் விளக்குகின்றுர்.

உயிரைப்பற்றி யிருக்கின்ற பாசம் நீங்க, சமயம் என்ற ஒரு நெறியைப் பற்றவேண்டும். உலகத்தில் பல சமயங்கள் உள. அவைகளில் தலை சிறந்தது சைவமாகும். ஏனென்றுல் சைவம் சிவ சம்பந்தமானது. இஃதே ஆதியில் இருந்த சமயம். மங்கள குண முடைமையும், அஞ்ஞானம் இல்லா

மையும், ஞானம் முற்றும் உடைமையும் ஆகிய இலக்கணங்களையுடையது சிவமாகும்.

"குறைவிலா மங்கள குணத்த னாதலின்
நிறைமலம் அறுதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன் என"

என்றார் சிவஞான முனிவர். இந்த இலக்கணங்களையுடையவராகக் கடவுளை வழிபடும் சமயம் எதுவாயிருப்பினும் அஃது சைவமாகும். உலகத்திலுள்ள பல பல சமயங்களும் "ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது." பல சமயங்களும் மக்களுடைய பக்குவத்திற் கேற்றபடி கடவுளால் வகுக்கப்பட்டன. ஒவ்வொரு சமயத்திலுள்ளவர்களும் தத்தம் சமயக் கொள்கைகளே முடிவான கொள்கைகளென்று வீணாகப் பேசுவார்கள்.

"சைவமுதல் அளவில் சமயமும் வகுத்து"

"ஸ்திரமென்று சந்ததம் தம் மதத்தையே
தாமதச் செய்கையொடு உளற அறிவார்"

என்றார் தாயுமானார்.

எச்சமயத்தைப் பற்றி ஒழுகினாலும் மனம் ஒடுங்கும்படி கற்கவேண்டும். ஏனெனின் மனம் ஒடுங்கினால் வீட்டு நெறிக்கு ஏதுவாகும்; ஒடுங்காவிட்டால் பிறப்புக் கேதுவாகும். அருணகிரியாரும் "சும்மாயிரு சொல்லற" என்றார். தாயுமானாரும்,

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்றருளியிருக்கிறார். அவர் வாக்கைக் கடைப்பிடித்து நாம் உய்வோமாக.

வாகீச முனிவர் அருளிய

# ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்

[ஆசிரியர் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

## அகவல் 13

பொன்னினு மணியினுங் குயிற்றி மின்னுகு*
மங்கத மகுடங் கடிப்பிணை யென்ற
பாரமென் றறியா தாரமென் றணியு
மம்மர் மாந்தரின் மயங்கா தம்ம
பூட்சிய தலைநீ கேட்டி மோட்ட
தவனற் றந்த குவைநெற் கொண்ட
முல்லை முகையன †மெல்லென் மூர
லங்கை தாங்கா தாற்றுபு மிசைவுழி
யங்கத் தியாவு மிசையா திங்குயிர்
விட்ட தென்று சட்டகம் புகழாக்
கட்டி லேற்றிக் கைதொழூஉப் பாவி
யிட்டிடை மகளி ரொருக்கச் சட்டென
வழல்வாய்ப் பல்பிண மருந்தீ மத்து
முருட்டணைப் பாயற் குரூஉப்புகை மிளிரப்
பாவகற் றழீஇக் கொன்னே வேவ
மிந்தனத் தியற்கை யாக்கை யென்றினி
விழித்தலை காணிஃ தொழிப்பரும் பெரும்பொறை
யெரிவிருந் தர்ய வீங்கு நீண்ட
விரிதரு கண்ணியர் மதனென் றூங்கும்
வேற்றுமை யுளதேற் சாற்றுக மாற்றிரி
யாடிப் பாவையோ டலர்நிழற் பாவை
கைகான் மெய்பிறி தெவையும் பைப்பயத்
தூக்கிற் றூங்கி மேக்குயர் புயர்தல்

---

*மின்னகு என்றும் பாடம். †முகையென என்றும் பாடம்.

பொறியொடு சிவண லென்ன
வறிவொடு செறியு நெறிவரு முடலே.

இது, பின்னரும் அக்கினி சம்பந்தமாகிய அனுமானத் தாற் சேதனு சேதனம் கூறியது.

இதனுள், "பொன்னினும் மணியினும்" (1) என்பது முதல் "பூட்சிய தலைநீ கேட்டி" (5) என்பது வரை ஒரு தொடராகவும், "மோட்ட தவனற்றந்த" (6) என்பது முதல், "விழித்தனை காண்" (17) என்பது வரை ஒரு தொடராகவும், "இஃதொழிப்பரும் பெரும் பொறை" (17) என்பது முதல், "வேற்றுமை யுளதேற் சாற்றுக" (20) என்பது வரை ஒரு தொடராகவும், "மாற்றிரி ஆடிப்பாவை யோடு" (21) என்பது முதல் "நெறிவரும் உடலே" (25) என்பது வரை ஒரு தொடராகவும் கொள்க.

## 1. முதலாவது தொடர் (1—5)

பொன்னினும் மணியினும் குயிற்றி, மின்னுகும்
அங்கதம், மகுடம், கடிப்பிணை என்ற
பாரம் என்(று) அறியா(து) ஆரம் என்(று) அணியும்
மம்மர் மாந்தரின் மயங்கா(து) அம்ம
பூட்சிய(து) அலைநீ, கேட்டி

இது, தன்னுடம்பையே தான் எனக் கருதி மயங்கும் மாணவனை நோக்கி, நீ உடம்பல்லை என முன்மொழிந்து கூறுகின்றது.

உரைமுடிபு :—குயிற்றி, மின்னுகும் அங்கதம் முதலியவற்றை, அறியாது, ஆரம் என்று அணியும் மாந்தரின், மயங்காது, நீ பூட்சியது அல்லை எனக் கேட்டி என்பது.

உரை :—பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்டு ஒளி வீசுகின்ற அங்கதம், மகுடம், மகரக்குழை என்ற அணிகலன்களை மெய்ச்சுமையே யென அறியாமல், அணி

செய்யும் ஆரம் எனப் பிறழவுணர்ந்து பூண்டு கொள்ளும் மயக்கத்தையுடைய மக்களைப்போல, என்பு நரம்பு தசை யென்றவற்றால் யாக்கப்பெற்ற யாக்கையை நீயே என மயங்காது, நீ அஃது அல்லை யென யாம் கூறும் இதனைக் கேட்டு அறிந்துகொள்வாயாக.

பொன்னினும் மணியினும் குயிற்று என்ற விடத்துக் குயிற்றியென்பது ஆக்கப்பொருண்மையே கருதி நிற்றலின், பொன்னின், மணியின் என்பன ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவிகளாய், ஆனுருபு விரியநின்றன. "மூன்றனும் ஐந்தனும் தோன்றக்கூறிய, ஆக்கமொடுபுணர்ந்த ஏதுக் கிளவி, நோக்கோரனைய என்மனார் புலவர்" (சொல். 92) என்பது விதி. அங்கதம், தோள்மாலை; வாகுவலயம் என் பதும் இதுவே. மகுடம், முடி, கடிப்பிணை, காதணி என்று சொல்லப்பட்ட அணிகலன்கள் : ஐயுருபுதொக்க. பாரம், மெய்ச்சுமை. ஆரம், ஈண்டுப் பொதுவாய்ப் புறத்தே அணிசெய்யும் அணிகண்மேல் நின்றது. பிறப்பறுக்கும் முயற்சி மேற்கொண்டவர்களுக்கு உடம்பைச் சுமந்து நிற்றலே பெரும்பாரமாதலின், அதன்மேல், அங்கதம் முதலிய இவற்றை யணிந்து கோடல், தாங்கரிய சுமையாம் என்பது தோன்றப் "பாரம் என்றறியாது" (3) என்றும், இவை சுமையாயிருப்பினும், அது தோன்றுவகையிற் புறத்தே காட்சியின்பம் வழங்குவதால், "ஆரம் என்று அணியும்" (3) என்றும், இவற்றின் உண்மையியல்பு தெளிந்தவர், இவற்றையும், இவற்றிற்கு இடனாகும் உடம் பையும் "மிகை" யெனவும், "வேறு" எனவும் கருது வாராக. தெளியாதார், உடம்பைத் தாமே எனவும், அணி களைத் தம்முடையவை யென்றும் கருதுவது குறித்து. அவரை, ஆசிரியர், "மம்மர்மாந்தரின்" (4) என்றும் கூறி னார். மம்மர், பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு

உணரமாட்டாத மயக்கம்; ஈண்டும், தம் உடலின் வேறாய அணிகளை வேறாகவே கருதுவதுபோல, உடலையும் வேறென்று கருதாது தாமே எனக் கருதும் மயக்கவுணர் வினையே மம்மர் என்கின்றார். மம்மர், மயக்கப்பொருட்டாதல், "யாம் காணேம் கல்விபோல், மம்மர் அறுக்கு மருந்து" எனவரும் நாலடியார் வெண்பாவால் உணர்க. சேதனமாகிய உயிரினும், அசேதனமாகிய உடல் வேறு எனவுணர்த்தலுறுகின்றாராகலின், மயங்காது அம்ம கேட்டி (4) என்றும், பூட்சியது அலை நீ (5) என்றும் கூறுகின்றார். பூட்சி, மேலே கூறிய அணிமுதலிய பூணாரங்களைப் பூணு தற்கு இடனாகிய உடம்பு. பூணாரங்களுக்கும், அவற்றைப் பூணும் உடம்பிற்கும் உள்ள இயைபே, உடம்பிற்கும், அதனை யியக்கும் உயிர்க்கும் உள்ள இயைபு என வுணராது மாறியுணரும் மாந்தரை, மம்மர் மாந்தர் என்றதற்கேற்ப, அவர்தம் உடம்பினையும், பூணுதல் என்னும் பொருட்டாய பூட்சி யென்ற பெயரிட்டழைக்கின்றார். "ஆட்சியைப் பொறியாளன் உடம்பெனும், பூட்சி நீள்கொடிப்புற்றின்" (சீவக. 1292) எனத்தேவர் கூறியதனையும் ஒப்புநோக்குக. பூட்சியது என்பதில், அது, பகுதிப்பொருள் விகுதி; மயக்கு மதற்று மருந்திற் றெளிந்தும்" (சிவ. போ. சூ. 7. அதி. 3. வெண். 2) என்புழிப்போல.

இவ்வாறு ஆசிரியர், உடம்பின் நீ வேறு என அறிக எனக் கூறியது போலவே, ஆசிரியர் அருணந்தி சிவனாரும்,

"பொன்னணி யாடை மாலை போதமே லான போதிங்(கு)
என் அணியான் என்றன்னி இருந்தனை பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினை, காயம் நின்னின்
அன்னிய மாகும் உன்னை அறிந்துநீ பிரிந்து பாரே"

(சிவசித் - 4 - 26)

என்று கூறுகின்றார்.

இதனால், ஆரம் என்று அணியும் அங்கதம், மகுடம், கடிப்பிணை யென்பன, தம்முடம்பின் வேறாயவாறு போல, உடம்பும் தம்மின் வேறெனவும், அவைமெய்க்குச் சுமையாதல் போல, உடம்பும் உயிர்க்குச் சுமையாய், அது வீடு பெறாதவாறு தகையும் தன்மைத் தெனவும், உடம்பின் வேறாயது உயிர் என்று துணியவேண்டு மெனவும் கூறிய வாறு. இவ்வியல்பினைப் பிரித்துணர்ந்த பெரியோர்க்கு இவ்வுடம்பும் மிகையாம் என்று, ஆசிரியர் திருவள்ளுவனாரும், "மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்புமிகை" (குறள். 345) என்ற திருக்குறளால் சுட்டியருளுகின்றார்.

## இரண்டாவது தொடர் (5-17)

. . . . மோட்ட
தவனற் றந்த குவைநெற் கொண்ட
முல்லை முகையன மெல்லென் மூரல்
அங்கை தாங்கா(து) ஆற்றுபு மிசைவுழி
அங்கத்(து) யாவும் அழியா(து) இங்கு, உயிர்
விட்டதென் று சட்டகம் புகழாக்
கட்டி லேற்றிக் கைதொழூஉப் பரவி
இட்டிடை மகளிர் எருக்க, சட்டென
அழல்வாய்ப் பல்பிணம் அருந்(து) ஈமத்து
முருட்டணைப் பாயல் குரூஉப்புகை மிளிர,
பாவகற் றழீஇக் கொன்னே வேஎம்
இந்தனத் தியற்கை யாக்கை, என்(று) இனி
விழித்தனை காண்.

இது, உடல் பிணமாமாறும், அதுகாலை ஒருங்கியைந்து நெருப்பில் வேமாறும் கூறியது.

உரைமுடிவு.—குவைநெல்கொண்ட, மோட்ட தவனன் தந்த, முல்லைமுகையன்னமூரல், அங்கைதாங்காது, ஆற்றுபு

மிசை யுழி, அங்கத்து யாவும் அழியாது, உயிர் இங்கு விட்டது என்று, (அது நின்ற) அச்சட்டகத்தை, புகழாக் கட்டில் ஏற்றி, மகளிர் கைதொழூஉப்பரவி எருக்க, சட்டெனக் (கொண்டு போய்), அழல்வாய், பிணம் (நாளும்) அருந்து ஈமத்து, முருட்டணைப் பாயலில், (கிடந்த), புகை மிளிர, பாவகனால் தழீஇவேம் இயற்கையினையுடையது யாக்கை என்று இனி விழித்தனை, காண் என்பது.

உரை :—விளைத்துக் குவித்த நெல்லிலிருந்து அரிசியாகக் கொண்டு மிக்க நெருப்பினால் முல்லையரும்பு போல வேகவைத்த மெல்லிய சோற்றினை, அழகியகை, வெப்பம் தாங்காதாகவும், வாயினால் ஊதியும், சிவிறிகொண்டு விசிறியும் ஆற்றியுண்ணும் காலத்தே, உடலில் ஒருறுப்பும் குறையாதிருக்க, “ இங்கே உயிர் போய் விட்டது ” என்று, அது நின்ற அவ்வுடம்பை, (புகழில்லாத) பாடையிலே வைத்து, சிறுத்த இடையினையுடைய மகளிர் கையால் தொழுது, முகத்திலும் மார்பிலும், அறைந்துகொண்டு புலம்ப, விரையக் கொண்டுபோய், நெருப்பாகிய வாயினால், பிணங்களை நாளும் உண்ணும் சுடுகாட்டில், முருட்டுக் கட்டைகளால் அணையும் படுக்கையுமாக அமைத்த அடுக்கில் கிடந்த, நிறம்பொருந்திய புகை விளங்கும் நெருப்பினால் பற்றப்பட்டு, வீணே வெந்தொழியும் விறகின் இயற்கையினையுடையது யாக்கையாவது என்று இப்பொழுது உன் அறிவுக் கண்ணைப் பரக்கத் திறந்து காண்பாயாக.

மோடு, மிகுதி, குவை, குவியல், மூரல், சோறு, தவனன், பாவகன், அக்கினி, நெருப்பு என்பன ஒரு பொருளன. தந்த கொண்ட என்ற பெயரெச்சங்கள் மூரல் என்பதனோடு இயைந்தன. சோற்றின் சீர்மையும் மென்மையும் தோன்ற “ முல்லை முகையென மெல்லென் மூரல் ” (7)

என்றார்; உடற்கண் நின்ற உயிர் அதனின் நீங்காது இருத்தற்கு ஆக்கந்தருவதுபோலத் தோன்றினும், இச் சோறுதானே, அவ்வுயிர் நீங்குதற்கும் காரணமாம் எனத் தாம் கருதிய பொருளை முடித்தற்கு மெல்லென் மூரலாயினும், அதனை அட்ட அணிமைக்கண் உண்டல்வேண்டுமேயன்றி, அஃது ஆறியவழி உண்ணின், தன்பொலிவும் சுவையும் இழந்து சோறும் உயிர்நிற்கும் உடற்கு நலம் செய்யாது; ஆகவே, அது வெய்தாய வழி ஆற்றி, பொறுத்தற்குரிய வெம்மையுள்வழி வாய்க்கிட்டு உதவுதலால், கையினை ஈண்டு, "அங்கை" (8) எனச் சிறப்பித்தார். உயிரினது உண்மையைத் துணிவதற் கேதுவாக இருக்கும் உடல், அதன் நீக்கத்தையும் வெளிப்பட வுணர்தற் கேதுவாக, ஓர் உறுப்பும் குறையாது விளங்கும் நிறைவு கருதி, "அங்கத்தியாவும் அழியாது" (8) என உயிர் நீக்கத்தில் நுண்மை காட்டியருளுகின்றார். உடம்பாற் பிணிப்புண்டதுபோல அதுபடும் நோயெல்லாம் தான் பட்டுவருந்தும் இயல்பிற்றாகலின் உயிரின் நீக்கத்தைப்பற்றி, "விட்டது" என்று கூறுவதனைக் காட்டினார். புகழாக் கட்டில் என்பது வெளிப்படையாய், பாடையை உணர்த்திற்று. இட்டிடை, சிற்றிடை; "ஆகாறளவு இட்டிதாயினும்" (குறள்) என வருதல் காண்க. தாழ்த்தவிடத்து, உயிர்நீங்கிய உடம்பு துர்நாற்றம் வீசுவதால், அதனை அடக்கம்செய்தலின் விரைவு தோன்றச் "சட்டென" என்றார். ஈமத்திட்ட பிணம் முற்றும் நெருப்பின்கண் வெந்து கரியும் சாம்பருமாய் மாறியொழிந்துபோதலின், ஈமம் அழலைவாயாய்க்கொண்டு பிணங்களை யுண்டு கழிகின்றது என ஏகதேச வுருவகத்தால் "அழல்வாய்ப் பல்பிணம் அருந்திமத்து" என்றார். முருட்டு, முருட்டுக்கட்டைகள் தழீஇயென்னும் செய்தெனெச்சம் பிறவினைப் பொருட்டு, அட்டில்தொழில், ஆகுதிவேட்டல் முதலியவற்றிற் பயன்படாது வறிதே வேகுதலால், அதனைக்

"கொன்னே வேளம் இந்தனத் தியற்கை" (15-6) என்றும், இயற்கையுடையதனை உபசாரத்தால் இயற்கையென்றும் கூறினர். இவ்வியற்கையினைக் கண்ணிற்கண்டும், உண்மை நோக்கமின்றி, அதன்பாற் பற்றுச்செய்து, அதுவே தான் என மயங்கி ஒழுகும் ஒழுக்கத்தின் புன்மையையுணர்த்துகின்றாராகலின், "விழித்தனைகாண்" (17) என்றார். அது நின்ற என்பன வருவிக்கப்பட்டன. கொண்டு போய், நாளும் கிடத்த என்பன அவாய்நிலை. சுட்டு வருவிக்கப்பட்டது. கெல் கொண்ட என்புழி இன்னுருபு விகாரத்தால் தொக்கது. "இட்டிடை மகளிர் எருக்க" என்றது அவர் புலம்பலின் பொருளின்மை யுணர நின்றது.

## மூன்றந் தொடர்

17 . . . . இஃதொழிப்பரும் பெரும் பொறை
எரிவிருந்தாய வீங்கு நீண்ட
வரிதரு கண்ணியர் மதன என்றுங்கும்
20. வேற்றுமை யுளதேல் சாற்றுக..."

இஃது உயிருள் வழியும் நீங்கினவழியும் உடலில் வேறுபாடில்லாமையைக் கூறுகின்றது.

உரைமுடிபு:—இஃது பெரும்பொறை; விருந்தாய ஈங்கும்; மதனன் என்றுங்கும், வேற்றுமை உளதேல் சாற்றுக என்பது.

உரை:—இவ்வுடல் உயிருக்கு நீக்குதற்கரிய பெருஞ் சுமையாகும். இதனைச் சுடலையில் இட்டு எரிக்கும் நிலையையடைந்த இப்பொழுதிலும், நீண்ட செவ்வரிபரந்த கண்களையுடைய மகளிர் "இவன் உருவுடைய மன்மதன்" என விரும்பியொழுகிய அப்பொழுதிலும், இவ்வுடலின் கண் வேற்றுமை யுண்டாயின் கூறுக.

முன்னர், உடம்பு உயிர் நீங்கிய விடத்து அக்கினி சம்பந்தம் பெறும் இழிவுணர்த்தினாராகலின், இஃது எனச் சுட்டியொழிந்தார். தூல சூக்குமங்களாகிய உடம்பு வகைகளுள், தூலம் நீங்கினும் சூக்குமம் நீங்காமையின், உடம்பு

நீக்கற்கரி தென்றார். பொறையாவது தன்னைத் தாங்குவது ஓங்குதலின்றி ஒடுங்குவிக்கும் இயல்புடைத்தாதல் போல, இவ்வுடலும் தன்னைத்தாங்கும் உயிர் தன்னின் நீங்கி வீடு பேற்று நெறியில் ஓங்காதவாறு, வினை செயல் வகையால் பிறப் பிறப்புக்கட் கேதுவாதலின், "பெறும்பொறை" (17) என்றார். என்ற என்புழி அகரம் விகாரத்தால் தொக்கது. "வேற்றுமையுளதேல் சாற்றுக" என்றது, வேற்றுமை யின்மையின் கூறுமாறில்லை யென்பதாம்.

## நான்காந் தொடர்

20 . . . . . மாற்றிரி
ஆடிப்பாவையோ(டு) அலர் நிழற்பாவை
கைகால் மெய்பிறி தெவையும் பைப்பயத்
தூக்கின் தூங்கி மேக்குயர்(பு) உயர்தல்
பொறியொடு சிவணல் என்ன
அறிவொடு செறியும் நெறிவரும் உடலே.

இது, சரீரம் ஆன்மா இயக்க இயங்கும் இயல்பிற்று என்று கூறுகின்றது.

உரைமுடிபு :—ஆடிப்பாவையும் நிழற்பாவையும் கை, கால், மெய் முதலிய எவையும் பைப்பயத் தூக்கின் தூங்கி, உயர்பு உயர்தல் சிவணல் என்ன, உடல் அறிவொடு செறி யும் என்பது.

உரை :—ஒப்பில்லாத கண்ணாடியில் தோன்றும் பாவை யும்; சூரியவொளி முதலியவற்றால் தோன்றும் நிழற்பாவை யும் எதிர் நிற்பவர், தம் கைகளையும், கால்களையும், உடலின் பிறவுறுப்புக்களையும் மெல்லத் தூக்கித் தூங்கவிடின் தூங்கு தலும் (தொங்குதலும்), மேலே உயர்த்தின் உயர்தலும் போல, கயிற்றுப் பொறியின் செயலால் பாவையியங்குதல் போல வினைவழியெய்தும் பான்மைத்தாகிய இவ்வுடல் ஆன் மாவின் செயற்கியையச் செறிந்தொழுகுவதாம்.

மாற்று, ஒப்பு, அலர், சூரியன். அலர் நிழற்பாவை உடலின் பொதுவுருக் காட்ட, ஆடிப்பாவை பொதுவுருவும் அதன் சிறப்புருவும் ஒருங்கே விளங்கக் காட்டும் சிறப்

புடைமை கருதி, " ஆடிப் பாவையோடு அலர்கிழற்பாவை " என்றார். " தம்மில், கையுங் காலும் தூக்கத் தூங்கும் ஆடிப்பாவைபோல, மேவன செய்யும் " (குறுந் 8) எனப் பிற சான்றோரும் பிறிதோரிடத்து உவமம் செய்தல்காண்க. மேக்குயர்தல், மேமேல உயர்தல், பொறி கயிற்றுப் பொறி. பாவையுவமம், ஆன்ம சந்நிதானத்தில் உடலியங்கும் நிலைக்கும், பொறியுவமம் ஆன்மாவின் விருப்பத்தின் வழி உடல் இயங்குதற்கும் கொள்க. அறிவே ஆன்மாவிற் குருவாகலின் " அறிவு " என்றும், அதன் செயலன்றி உடற்கு வேறே செயலின்மையின், " செறியும் " என்றும் கூறினார்.

இதுகாறும் கூறியவாற்றால், உடலையே தான் எனக் கருதி யொழுகும் ஒழுக்கத்தின் புன்மையும், அதன் நிலையாமையும், அது பிணமாம் வகையிற் பிறக்கும் சிறப்பின்மையும், ஆன்ம சந்நிதானத்தில் அதன் இயக்க நிலையும் பிறவும் கூறியவாறும்.

# திருவாசகம்

[ஆசிரியர் : மாங்காடு - வடிவேலு முதலியார்]

## "வெள்ளந்தாழ்" என்னும் முதற்குறிப்புச்செய்யுளிலுள்ள " அண்ணா " என்னும் சொல்லின் ஆராய்ச்சி

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

இச்செய்யுள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பெறுவது. அவற்றுள் :—முதலாவது : " வெள்ளந்தாழ் விரிசடையாய் ! விடையாய் ! விண்ணோர் பெருமானே !" என்பது.

இஃது அன்பிலரோ, அன்புளரோ, இறைவனை இத் தொடர் மொழிகளைக் கொண்டு அழைத்தமை.

இரண்டாவது : " எனக்கேட்டு - வேட்டநெஞ்சாய்ப் பள்ளந்தாழுறுபுனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகும் அவர் " என்பது.

இஃது இவர்கள் அத்தொடர் மொழிகளைக் கேட்ட மாத்திரத்தில் மிக விரும்பின நெஞ்சம் உடையவர்களாகி மேட்டிலிருந்து பள்ளத்தில் இறங்கும் நீரானது அவ்விறங்கினவிரைவின் வன்மையால் கீழ்நீர் மேலாகவும், மேல் நீர் கீழாகவும் கலந்து பொங்கிப் புரள்வது போலப் பதைத்துருகும் பேரன்பினர்.

மூன்றாவது : " அவர் நிற்க என்னை ஆண்டாய்க்கு " என்பது.

இஃது, அப்பெற்றித்தாய அன்பர்களை ஆட்கொள்ளாமல் தம்மை (மணிமொழிப் பெருமானை) ஆண்டமை கூறல்.

நான்காவது : " உள்ளந்தாணின் றுச்சியளவு நெஞ்சாயுருகாதா - லுடம்பெல்லாங் கண்ணாயண்ணா, வெள்ளந்தான் பாயாதால் " என்பது.

இஃது, இறைவன் அவ்வாறு தம்மை (மணிமொழிப் பெருமானை) ஆட்கொண்ட பேருளுக்கு அறிகுறியாகத் தாம் தம் உள்ளங்காலிலிருந்து உச்சியளவும் நெஞ்சாகக் கொண்டு உருகுவதோடு, புறக்கருவியும் ஐம்பொறிகளில் ஒன்றும் வடிவமுடையதுமான இருகண்கள் அவ்வின்ப வெள்ளம் பாயப்போதாவாகையால் தம் உடம்பு முழுமையும் கட்பொறிகளாக அண்ணி (பொருந்தி), இன்ப வெள்ளம் பெருகவேண்டும் எனக் கூறல்.

ஐந்தாவது : (பாயாதால்) " தீவினையினேற்கு நெஞ்சம் கல்லாம் கண்ணிணையு மரமாம் " என்பது.

இஃது, அப்பெற்றியனவான பேரன்பின் (தலையன்பின்) குறிகளாக நெஞ்சங் கரைதலும், கண்கள் இன்பவெள்

ளம் பாய்தலுமான நெகிழ்ச்சி தம்மிடம் நிகழாமையால் தம் நெஞ்சம் கரையாக் கல்லொப்பதெனவும், கண்கள் நீரை வெளிவிடா மரங்களொப்பன வெனவும் கூறல்.

ஆகவின் இச்செய்யுளில் வரும், "அண்ணு" என்னுஞ் சொற்கு உண்மைப்பொருள் இறைவனை அண்ணு என்று விளித்தலன்று.

'அண்ணு' என்னும் சொல்லைச் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாக்கி, 'அண்ணி' என்று பொருள் கொண்டு 'பாயாதால்' என்னும் வினையிற் கூட்டி முடித்தல் தகுதி.

'அண்ணு' என்று விளியாக்கி அழைத்தால் என்ன குற்றம் உண்டாமென்று ஐயவினு விடுப்பாரும் உளர்.

அவர்கள், கண்கள் வடிவில்லாத நெஞ்சம்போலாகாமல் வடிவமுடையவைகளாகையாலும் மற்ற இரண்டு கண்கள்போல் உடம்பெல்லாம் கண்வடிவமுண்டாகவேண்டியவைகளாகையாலும், என்னை ஆண்டாய்க்கு நான் இவ்வாறுய அன்பைச் செலுத்த வேண்டுமென்று கூறவேண்டுமேயன்றி, ஆண்டு அண்ணு என்று விளித்துக் கூறல் தகுதியன்முகையாலும் அது பொருந்ாதென் றுணரவேண்டும்.

இவ்வாறே "கோகழி" என்பதைத் திருப்பெருந்துறை எனவும், திருவாவடுதுறை எனவும், சிவலோகம் எனவும்,

"தாராயுடையா யடியேற்கு" என்னும் முதற்குறிப்புச் செய்யுளில், "ஊராமிலைக்கக் குருட்டா மிலைத்து" என்னும் தொடரிலுள்ள "மிலைத்து" என்னும் சொற்கு மேய்ந்து எனவும் சிலர் பொருள் கூறுகின்றனர். அவற்றின் உண்மைப் பொருள்களும் பின்னர் வரும் சித்தாந்தத்தில் தனித்தனியாக விளக்கப்படும்.